Registered as a News Paper

பக்கங்கள் 06

விலை ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM

Peoples Daily

மக்கள் தினசரி

நாதம் 03 | திருவள்ளுவர் ஆண்டு 2023 | ஆனி 29 | 13 - 07 - 1992 | திங்கட்கிழமை | ஓசை 146

## பொலித்தீனில் அடைத்த சுண்ணாம்பால் ஆபத்து

பொலித்தீன் பைகளில் அடைத்து விற்கப்படும் சுண்ணாம்பை பாவனைக்கு எடுக்கும்போது மிகவும் அவதானமாக இருக்கும்படி கண் சிகிச்சை நிபுணர் டாக்டர் திருமதி லக்மினி இலங்கசிங்க கூறியுள்ளார். இந்தச் சுண்ணாம்பு கண்ணில் பட்டவுடன் கண்மணிகள் கரையத் தொடங்கி கண்பார்வையை இழக்கநேரிடும். இதனைச் சுகப்படுத்தி மீண்டும் பார்வை பெற முடியாது. இவ்விதமான பார்வையிழப்பு இலங்கையில் ஆண்டொன்றுக்கு 12 முதல் 15 வரை ஏற்பட்டு வருகின்றன. இவற்றை சிறு குழந்தைகளின் கைகளுக்கு எட்டாத வகையில் வைத்திருப்பது அவசியம். சுண்ணாம்பு அடைத்து வைத்திருந்த வெற்றுப் பொலித்தீன் பைகளை சிறுவர்கள் விளையாட்டுப் பொருளாக பயன்படுத்தாத (6 ஆம் பக்கம் பார்க்க)

### செட்டிகுளம் பகுதியில்

# காவலரண்களிலிருந்து ராணுவம் வாபஸ்

# மினி முகாம்களை மூடிவிடவும் திட்டம்

## ஹெரோயின் பிடிபட்டது

ஒருவார காலத்திற்குள் அறுபது இலட்சம் ரூபாய் பெறுமதியான 4110 கிராம் (நான்கு கிலோவிற்கு மேல்) ஹெரோயினை கொழும்பு பொலிஸ் [6 ஆம் பக்கம் பார்க்க]

## புலிகளின் துணிகர தாக்குதலின் எதிரொலி

(வவுனியா)

செட்டிகுளம் பகுதியில், வண்ணான்குளம் இராணுவ முகாம் புலிகளால் தாக்கி அழிக்கப்பட்டதைத் தொடர்ந்துசெட்டிகுளப் பகுதியிலுள்ள காவலரண்களிலிருந்து இராணுவத்தினர் வெளியேறி முகாமிற்குள் சென்றுள்ளனர். அத்தோடு இப் பகுதியில் உள்ள மினி முகாம்களையும் மூடிவிட ஆலோசிக்கப்பட்டு வருவதாகவும் தெரியவருகிறது.

அண்மைக் காலத்தில் செட்டிகுளம் பகுதியில் இராணுவத்தினர் பெரும் எண்ணிக்கையில் தொடர் காவலரண்களை அமைத்திருந்தனர். சிங்களக் குடியேற்றங்களை விஸ்தரிக்கும் நோக்கில் இக்காவலரண்கள் அமைக்கப்பட்டிருந்தன.

இதேவேளை விடுதலைப்புலிகளும் தொடர்ச்சியாக இக்காவலரண்கள் மீது தாக்குதலைத் தொடுத்திருந்தனர். இதனால் பல இராணுவத்தினா கொல்லப்பட்டும், பெருமளவு ஆயுதங்களையும் புலிகளிடம் இழந்தும் வந்தனர்.

இந்நிலையில் நேற்று முன்தினம் அதிகாலை வண்ணான்குளம் இராணுவ முகாமை விடுதலைப் புலிகள் தாக்கி அழித்ததைத் தொடர்ந்து இப்பகுதியிலுள்ள காவலரண்களிலிருந்த இராணுவத்தினர் வெளியேறியுள்ளனர்.

செட்டிகுளம் பகுதியிலிருந்த காவலரண்களிலிருந்து இராணுவத்தினர் வெளியேறியது போல் தந்திரிமலைப்பகுதி காவலரண்களில் இருந்த இராணுவத்தினரும் வெளியேறியுள்ளனர்.

அத்தோடு இவ் எல்லை ஓரத்தில் உள்ள மினி முகாம்களின் பாதுகாப்பு குறித்து சர்ச்சை எழுந்துள்ளதால் அவற்றை மூடிவிடவும் ஆலோசிக்கப்பட்டு வருவதாகவும் தெரியவருகிறது.

## பருத்தித்துறை கப்பல் சேவை விஸ்தரிக்க நடவடிக்கை

### மிதக்கும் பாதையை நிறுவத்திட்டம்

(நமது நிருபர்)

பருத்தித்துறை துறைமுகத்தை விருத்தி செய்யவும், கப்பல் சேவையை அதிகரிப்பதற்கும் இதன்மூலம் அத்தியாவசியப் பொருள்களை குடாநாட்டிற்குள் கொண்டுவர சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் நடவடிக்கை எடுத்து வருவதாக தெரிய வருகிறது.

இராணுவ நடவடிக்கைகாரணமாக கொம்படி - ஊரியான் பாதைகள் மூடப்பட்டமையும் காங்கேசன்துறை துறைமுகத்திற்கு ராணுவம் சென்றுவர அனுமதிமறுத்துள்ளதைத் தொடர்ந்தும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் இம் முயற்சியில் தீவிர கவனம் செலுத்தி வருகின்றது.

இதற்கென சர்வதேச செஞ்சிலுவைச் சங்க அதிகாரிகள் கொழும்பில் அத்தியாவசிய சேவைகள் அமைச்சின் அதிகாரிகளுடனும், கூட்டுப்படை அதிகாரிகளுடனும் பேச்சுவார்த்தை நடத்தி வருவதாகவும் தெரிய வருகிறது.

இதேவேளை கப்பல் சேவையைவிஸ்தரிப்பதற்கும், பொருள்களைஇறக்கி ஏற்றுவதற்கு வசதிசெய்வதற்குமென ஓர் மிதக்கும் பாதையை அமைக்கும் திட்டத்தையும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் அமுல் படுத்தவுள்ளதாக அறிய வருகிறது.

அத்தோடு, பருத்தித்துறை துறைமுகத்திற்கு மேலதிக கப்பல்களைக் கொண்டு வரவும் செஞ்சிலுவைச் சங்கம் தீவிர முயற்சியில் இறங்கியுள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

### வண்ணான்குள இராணுவமுகாம் தகர்ப்பு

# புலிகள் தமது பலத்தை மீண்டும் நிரூபித்துள்ளனர்

### - பி.பி.ஸி. தெரிவிப்பு

சிறிலங்கா இராணுவத்துக்கு எதிராக மிகவும் கடும் தாக்குதலை தம்மால் நடத்த முடியும் என்பதைப் புலிப்படையினர் மீண்டும் காட்டியுள்ள

ணுவ முகாம் தாக்குதல் நடந்துள்ளது.

முன்னர்தான் இராணுவம் அறிவித்தது. இதன் விளை

## மன்னார் வவுனியாவில் பலத்த எறிகணை வீச்சு

[வவுனியா]

மன்னார் மாவட்டம் தள்ளாடி, வங்காலை, மாந்தை ஆகிய இராணுவ முகாம்களிலிருந்து சரமாரியான எறிகணை தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

எறிகணைத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

வவுனியா நெலுக்குளம் பகு (6 ஆம் பக்கம் பார்க்க)

## வீரச்சாவு

### அமைச்சர் தொண்டமானின் கோரிக்கை

## மாகாண முதலமைச்சரால் முற்றாக நிராகரிப்பு

அட்டன் பகுதியிலுள்ள கிராமமொன்றிற்கு தமிழ்ப் பெயர் சூட்டவேண்டும் என சிறிலங்கா அமைச்சர் தொண்டமான் விடுத்த கோரிக்கை

யில் தொண்டமானின் வேண்டுகோள் தேவையற்றதும் பொருத்தமற்றதும் என்பதுடன் இனத்துவேசத்தைத் தூண்டக்கூடியது என்று தெரி

எதிராக மிகவும் கடும் தாக்குதலை தம்மால் நடத்த முடியும் என்பதைப் புலிப்படையினர் மீண்டும் காட்டியுள்ளனர் என்று பி. பி. ஸி. நிருபர் சியாக்காதோஸ்கின் செய்திக் குறிப்புத் தெரிவிக்கின்றது.

வண்ணான்குளம் இராணுவ முகாம்மீது புலிப்படையினர் நேற்று முன்தினம் நடத்திய தாக்குதலில் 40 க்கும் அதிகமானஇராணுவத்தினர் கொல்லப்பட்டதாக இராணுவ அதிகாரிகள் இப்போது கூறுகின்றனர். இது யாழ்ப்பாணத் தீபகற்பத்தை நாட்டின் ஏனைய பகுதிகளிலிருந்து துண்டித்து விட்டதாக சில நாட்களுக்குமுன் இராணுவம் அறிவித்தமைக்கு முரணாக இருக்கிறது என்று பி. பி. ஸி. மேலும் தெரிவிக்கின்றது.

திருக்கோணமலை மாவட்டத்திலுள்ள கந்தளாய் என்ற இடத்தில் வழிமடக்கித் தாக்கி 18 இராணுவ வீரர்களைக் கொன்ற தினத்திற்கு மறுதினம் வண்ணான்குள இராணுவ முகாம் தாக்குதல் நடந்துள்ளது.

யாழ்ப்பாணக் குடாநாட்டை நாட்டின் ஏனைய பகுதிகளிலிருந்து துண்டித்திருப்பதாக சில நாட்களுக்கு

## பி.பி.ஸி. எதிர்ப்பு

முன்னர்தான் இராணுவம் அறிவித்தது. இதன் விளைவாகப் புலிப்படையினர் தமது தலைமைப் பணிமனைக்கு நாட்டின் ஏனைய பகுதிகளு

(4 ஆம் பக்கம் பார்க்க)

ருந்து சரமாரியான எறிகணை தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

வண்ணான்குளம் இராணுவ முகாம் விடுதலைப்புலிகளால் முற்றாகத் தாக்கியழிக்கப்பட்டதைத் தொடர்ந்து இந்த

# இராணுவ முகாம் தகர்ப்பில் 52 படையினர் பலி

வண்ணான்குள முகாமில் இராணுவத்தினர் கொல்லப்பட்ட செய்தி கொழும்பில் நேற்று ஆங்கில ஞாயிறு இதழ்கள் இரண்டில்முதல்பக்கத்தில் பிரசுரமாகியுள்ளன.

ஐலண்ட் பத்திரிகை, புலிகள் இராணுவ முகாமைத் தாக்கி 52 வீரர்களைக் கொன்றனர் என்ற தலைப்புச் செய்தி

## ஐலண்ட் பத்திரிகை தகவல்

வெளியிட்டுள்ளது. புலிப்படையினர் கொக்காவில், மாங்குளம் முகாம்கள் மீது நடத்திய தாக்குதல்களின்போதும், திருக்கோணமலையில் இராணுவக் கொமாண்டோ மீது நடத்திய தாக்குதல்களின் போதும் ஏற்பட்ட சேதங்களுக்குப் பின்னர் ஏற்பட்ட இந்த மோசமான இழப்புகளும், சேதங்களும் நேற்று நடத்தப்பட்ட தாக்குதலில் ஏற்பட்டிருக்கக் கூடும் என்று ஐலண்ட் ஞாயிறு இதழ் எழுதியுள்ளது.

இதேவேளை இத் தாக்குதல் குறித்து சண்டே ஒப்சேபர் முதல் பக்கத்தின் கீழ் பகுதியில் 45 பேர் கொல்லப்பட்டனர் என்ற செய்தியையும் வெளியிட்டுள்ளது.

## முப்படைத் தளபதிகள் மீது தாக்குதல் நடத்த திட்டமாம்

சிறிலங்காவின் முப்படைத் தளபதிகள் மீது தாக்குதல் நடத்த விடுதலைப் புலிகள் திட்டமிட்டுள்ளனர் என்று புலனாய்வு அறிக்கைகள் கூறுகின்றன என்று கொழும்புப் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன.

இதற்கென விசேட அதிரடிக் குழுவொன்றினை விடுதலைப் புலிகள் அமைத்துள்ளனர் என்று ரகசிய அறிக்கைகள் தெரிவிக்கின்றன என்றும்,

ராணுவத்தளபதி லெப்டினன்ட் ஜெனரல்சிசில் வைத்தியரட்ண, கடற்படைத் தளபதி அட்மிரஸ் பெர்னான்டோ, விமானப்படைத் தளபதி ஏயார் மார்ஷல் எஸ். குணவர்த்தனாவையும் விடுதலைப் புலிகள் இலக்குகள் வைத்துள்ளனர் என்றும் ரகசிய தகவல்கள் தெரிவித்துள்ளதாக பத்திரிகைகள் குறிப்பிட்டுள்ளன.

கொக்கட்டிச்சோலை படுகொலை

## இராணுவ விசாரணை அடுத்தவாரம் ஆரம்பம்

(கொழும்பு)

கொக்கட்டிச்சோலை படுகொலை குறித்து பதினாங்கு இராணுவத்திற்கு எதிராக அடுத்த வாரம் இராணுவ விசாரணை நடைபெற இருப்பதாக சிறிலங்கா இரா்ணுவ உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளதாக சண்டே ரைம்ஸ் தெரிவித்துள்ளது.

கடந்த வருடம் யூலை மாதம் 13ஆம் திகதி கொக்கட்டிச் சோலை படுகொலை தொடர்பாக இந்த விசாரணைகள் மேற்கொள்ளப்படுவது தெரிந்ததே.

முல்லை முகாமில் நகைகள் மறைவு;

## 12 இராணுவத்தினர் நீதி மன்றத்தில் ஆஜர்

(வவுனியா)

முல்லைத்தீவு சிறிலங்கா இராணுவ முகாமில் பாதுகாப்புக்காக வைக்கப்பட்டிருந்த அடகு நகைகளின்ஒருதொகுதி காணாமல் போனது தொடர்பாக கைது செய்யப்பட்ட பன்னிரண்டு இராணுவத்தினரும் வவுனியா நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டனர்.

மேற்படி பன்னிரண்டு இராணுவத்தினரில் அதிகாரிகள் சிலரும் அடங்குகின்றனர்.

முல்லைத்தீவு மக்கள் வங்கிக் கிளையில் முன்னர்அடகுவைக்கப்பட்ட இந்தநகைகளை உரியவர்களிடம் ஒப்படைப்பதற்காக வங்கி நிர்வாகம் முல்லைத்தீவு இராணுவ முகாமில் பாதுகாப்புக்காக ஒப்படைத்திருந்தது என்றும்,

ஆனால் இவற்றில் 82. 74 கிராம் எடையுள்ள நகைகள்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## முஸ்லிம் காங்கிரஸ் அக்கறை செலுத்தும் விடயம்

(கொழும்பு)

ஏழு தமிழ்க்கட்சிகளோடு பேச்சுவார்த்தைகளை செய்து கொண்டிருக்கும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அம்பாறை மாவட்டத்திற்கு வெளியிலுள்ள மட்டக்களப்பு திருமலை, வன்னிப் பகுதியில் வாழும் முஸ்லிம்களின் எதிர்

(6 ஆம் பக்கம் பார்க்க)

(6 ஆம் பக்கம் பார்க்க)

## வீரச்சாவு



வீரவேங்கை
**கானகன்**

1 -07-92 அன்று விடுதலைப் புலிகளால் மேற்கொள்ளப்பட்ட வண்ணான்குள முகாம் தகர்ப்பின் பின்னர் தந்திரிமலை இராணுவத்தினர் மேற்

(6 ஆம் பக்கம் பார்க்க)

பெயர் சூட்டவேண்டும் என சிறிலங்கா அமைச்சர் தொண்டமான் விடுத்த கோரிக்கை மத்திய மாகாண முதலமைச்சரால் நிராகரிக்கப்பட்டது.

'அப்கொட்' பகுதிக்கு 'நிசங்க உயன்ன' என்ற பெயருக்குப் பதிலாக சுவாமிமலை எனப்பெயரிட வேண்டும் என தொண்டமான் கோரிக்கை விடுத்திருந்தார்.

இது குறித்து மத்திய மாகாண முதலமைச்சர் சமரதுங்க கருத்துத் தெரிவிக்கை பொருத்தமற்றதும் என்பதுடன் இனத்துவேசத்தைத் தூண்டக்கூடியது என்று தெரிவித்தார்.

மத்திய மாகாண முதலமைச்சரின் இச்கூற்று இனத்துவேசத்தை தூண்டுவதாக இருக்கிறதெனக் கூறி மாகாண சபையின் இ.தொ.க.உறுப்பினர்கள் அனைவரும் ஐக்கிய தேசியக்கட்சியின் ஒரேயொரு தமிழ் உறுப்பினரும் மத்திய மாகாண சபையிலிருந்து வெளிநடப்புச் செய்தனர்.

## புதிய வரவு செலவு திட்டம் நவம்பர் 6இல்

ஐ தே க. அரசின் 1993 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தை பிரதமர் டி. பி. விஜயதுங்கா நவம்பர் 6 ஆம் திகதி பிற்பகல் 2. 30 மணிக்குச் சமர்ப்பிப்பார் என சிறிலங்கா அமைச்சரவைப் பேச்சாளர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

1993 ஆம் வருடத்திற்கான ஒதுக்கீட்டுச் சட்டமூலம் ஒக்டோபர் 6 ஆம் திகதி சமர்ப்பிக்கப்படும் என்றும்,

இதன் இரண்டாவது வாசிப்பு நவம்பர் 6 ஆம் திகதி இடம்பெறும் என்றும்,

இரண்டாவது வாசிப்பு மீதான விவாதம் நவம்பர் 10 ஆம் திகதி ஆரம்பமாகி ஏழு தினங்கள் தொடர்ந்து நடைபெறும் என்றும்,

வாக்கெடுப்புநவம்பர்18ஆம் திகதி இடம்பெறும் எனவும், வரவுசெலவுத்திட்ட குழுநிலை விவாதம் 19 தினங்கள் நடைபெறும் என்றும், என்றும் அவர் தெரிவித்தார்.

அத்தியாவசியப் பொருள்களை

# விலைகூட்டி விற்போர் மீது காவல்துறை நடவடிக்கை

யுத்த கால சூழ்நிலையைச் சாட்டாக வைத்து அத்தியாவசியப் பொருள்களை விலை கூட்டி விற்போர்பதுக்குவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வாறு தமிழீழ காவல்துறையினரின் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அச் செய்தியில் மேலும் அத்தியாவசியப் பொருள்களாகிய மண்ணெண்ணெய், தேங்காயெண்ணெய், சவர்க்காரம் போன்ற பொருள்களை பதுக்கியும், கூடிய விலையில் விற்றும் வந்த வர்த்தகர்கள் மீது காவல்துறையினர் நடவடிக்கை எடுத்து வருகின்றனர். இதுவரை காலமும் மண்ணெண்ணெய்யைப் பதுக்கிய வர்த்தகர்கள் தற்போது தேங்காயெண்ணெய், சவர்க்காரம் போன்ற பொருள்களையும் பதுக்கியும், கூடிய விலையில் விற்றும் வருகின்றனர். இவர்கள் மக்கள்படும் துன்பங்களையோ, துயரங்களையோ உணராதவர்கள். எமதுமக்கள் மீது பெருந் துன்பச் சுமையைத் திணிப்பவர்கள் மனிதநேயமற்ற இவர்களது செயல் மிகவும் கண்டிக்கத்தக்க தொன்றாகும்.

இவ்வாறு மக்கள் விரோத செயல்களில் ஈடுபட்ட பல வர்த்தகர்களின் மீது காவல்துறையினர் நடவடிக்கை எடுத்து வருகின்றனர் இவ்வாறு நடவடிக்கை எடுத்த பின்னர் திரும்பவும் இத்தீய செயல்களில் ஈடுபடுவோர்களாயின் இவர்களது பொருள்கள் யாவும் பறிமுதல் செய்யப்பட்டு மக்களுக்கு விநியோகிக்கப்படுவதுடன், நீண்டகாலத்திற்கு தடுத்தும் வைக்கப்படுவர். இவர்கள் பற்றிய தகவல்களை உடனுக்குடன் தந்துதவும் பொது மக்களுக்கு எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம். என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வரி விளம்பரம்

### 200 நாடகங்கள்

யாழ்ப்பாணப் பேச்சு வழக்குத் தமிழில் முதன்முதலாக நாடகங்கள் எழுதி அரங்கேற்றிய பேராசிரியர் ·க.கணபதிப்பிள்ளையின் மாணவர்களில் இன்று நாடகம் எழுதும் ஒரேயொரு மாணவனான - 200க்கும் அதிகமான நாடகங்கள் எழுதிய அராலியூர் ந. சுந்தரம்பிள்ளையின் நூல்கள் : கெட்டிக் காரர்கள் 25/-, முதலாம்பிள்ளை 30|- (2722)

### கிரிக்கட் போட்டி

பாடசாலை இடையே 17 வயதிற்குஉட்பட்டோருக்கான அரையிறுதி கிரிக்கட் ஆட்டத்தில் புனிதபத்திரிசியர் கல்லூரி ஒரு ஓட்டத்தினால் வெற்றியீட்டிஇறுதிஆட்டத்தில்விளையாட தகுதி பெற்றது. இவ் ஆட்டத்தில் புனிதபத்திரிசியர் கல்லூரி 124 ஓட்டங்களையும், யாழ்ப்பாணக்கல்லூரி 123 ஓட்டங்களையும்பெற்றன

### மேஜர் முரளிநினைவு விளையாட்டு விழா

[யாழ்ப்பாணம்]

யாழ் கல்விக்கோட்டப்பாடசாலைக்குயிடையிலானமேஜர் முரளி ஞாபகார்த்த விளையாட்டு விழா இன்று திங்கட் கிழமை தொடக்கம் நடைபெறவுள்ளது.

ஆரம்ப நிகழ்ச்சியாக மேஜர் முரளிக்கு கொத்தணி தேசிய தனியார் பாடசாலைகளில் இருந்து எடுத்துவரப்படும் செய்தி [ஓடிவருதல்] அஞ்சல் தியாகி திலீபன் நினைவுதூபிக்கு முன்னால் தெரிவிக்கப்பட்டு மேஜர் முரளிக்கு அஞ்சலி செலுத்தப்படும். இதன் பின்னர் பாடசாலைகளுக்கு யிடையே தாச்சி, உதைபந்தாட்டம், வலைபந்தாட்டம் மரதன் ஓட்டம் சைக்கிள் ஓட்டம், கயிறுழுத்தல், மெய்வல்லுநர் நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளன.

### நிர்வாகிகள் தெரிவு

யாழ்.மாவட்டசிக்கனகடன் வழங்கு கூட்டுறவுச்சங்கங்களின் சமாசம்யாழ்.பிராந்திய சபையின் வருடாந்தப்பொதுக் கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும் கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலத்தில் சமாசத்தலைவர் திரு.ச. முருகனேசன் தலைமையில் நடைபெற்றது.

யாழ்.பிராந்திய சபையின் [யாழ்.உ.அ.அ.பிரிவு] புதிய தலைவராக நான்காவது தடவையும் கொழும்புத்துறை கிழக்கு சிக்கனகடன் வழங்கு கூட்டுறவுச்சங்கத்தைச்சேர்ந்த திரு.செ.கந்தசாமி போட்டி

## வட-கிழக்கு இணைப்பை சுதந்திரக்கட்சி எதிர்க்கும்

வடக்கு, கிழக்கு மாகாணங்கள் இணைக்கப்பட்டு இனப் பிரச்சினைக்கு தீர்வு காணப் படுவதை சிறிலங்கா சுதந்திரக் கட்சி தொடர்ந்தும் எதிர்க்கும் என்று கொழும்பிலிருந்து கிடைக்கும் செய்திகள் மூலம் தெரியவருகின்றது-

## ஓராண்டு நினைவஞ்சலி



### வீரவேங்கை வினோசா

(சுவாம்பிள்ளை விஜிதா)

மலர்வு: 09-07-1974

உதிர்வு: 13-07-1991

இவரின் ஆன்ம சாந்திக்காக 13-07-92 திங்கட் கிழ்மை இன்று காலை 6-00 மணிக்கு பாஷையூர் புனித அந்தோனியார் ஆலயத்தில் இரங்கற் திருப்பலி ஒப்புக் கொள்ளப்படும். அப்பலியில் பங்குபற்றுமாறு அனைவரையும் பணிவுடன் அழைக்கின்றோம்.

21,1ஆம் குறுக்குத் தெரு,<br>
பாஷையூர் - யாழ்ப்பாணம்.<br>
11-07-1992<br>
(2796)

இவரின் பிரிவால் துயருறும்<br>
அப்பா, அம்மா,<br>
சகோதரர்கள், உறவினர்கள்,<br>
நண்பர்கள்.

## நீங்காத நினைவுகள்



### அப்பன் (யோ· லெஸ்ரர்)

தோற்றம் 20 - 11 - 1972

மறைவு 13-07-1991

## நினைவுகூருகின்றோம். . 1992 - 07 - 13

1984 ஆம் ஆண்டு இத்தேதினத்தில் தொண்டமானாற்றில் சிறிலங்கா அதிரடிப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் வீரச்சாவெய்திய -

**கப்டன் லாலா/ரஞ்சன்** (கனகநாயகம் ஞானேந்திர மோகன் - பழையஉடையார் ஒழுங்கை, ஓடக்கரை, பருத்தித்துறை)

தமிழீழக் கடற்பரப்பில் சிறிலங்காப் படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட தமிழ்க்கடற்றொழிலாளி.

1986 ஆம் ஆண்டு மன்னாரில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட நடவடிக்கைகளில் கொல்லப்பட்ட 50-க்கும் மேற்பட்ட தமிழர்கள்.

வவுனியா / பாவற்குளம் 10 ஆம் படிவப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக்கொல்லப்பட்ட தமிழ் விவசாயிகள்.

1987 ஆம் ஆண்டு வீரச்சாவெய்திய -

**லின்டன்** (சின்னையா நடராசா -விளாத்திக்குளம், இரணை இலுப்பைக்குளம்,வவுனியா)

வடமராட்சியில், சிறிலங்காப் படையினரால் படுகொலை செய்யப்பட்ட கரவெட்டி மேற்கு மணியர் வளவைச் சேர்ந்த தமிழ்ப் பொதுமகன்.

1988 ஆம் ஆண்டு இந்தியப் படையினரால் கைது செய்யப்பட்டு முகாமில் வைத்துக் கொலை செய்யப்பட்ட மட்டக்களப்பு ஆரையம்பதியைச் சேர்ந்த தமிழ் இளைஞன்.

1989 ஆம் ஆண்டு கொழும்பில் தமிழினத்துரோகிகளுக்கான மரணதண்டனையை நிறைவேற்றியபோது சிறிலங்காப் படையினருடன் ஏற்பட்ட மோதலில் வீரச்சாவெய்திய -

**கப்டன் அறிவு** (கனகசபை சிவானந்தன் - ஒட்டங்குளம், வவுனியா)

**2 ஆம் லெப். பீற்றர்** (அலோசியஸ்-கிளிநொச்சி)

**மேஜர் விசு** (இராசையா அரவிந்தராம் - வதிரி, கரவெட்டி, நெல்லியடி)

திருக்கோணமலையில், தேசவிரோத சக்திகளினால் வெட்டிக்கொலை செய்யப்பட்ட நாட்டுப்பற்றாளரான-

**சறோஅக்கா** (தாமோதரம்பிள்ளை சறோஜினி தேவி - கூனித்தீவு,மூதூர், திருக்கோணமலை)

டருத்தித்துறை - இன்பருட்டிப் பகுதியில் சிற்றூர்தி ஒன்றின்மீது இந்தியப் படையினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்ட 3 - தமிழர்கள்

1990 ஆம் ஆண்டு கிளிநொச்சி, கொக்காவில் பகுதியில் அமைந்திருந்த சிறிலங்கா இராணுவ முகாம் தகர்ப்பின் 3 ஆம் நாள் சமரில் வீரச்சாவெய்திய -

**கப்டன் உஷா** (வனிதாம்பிகை இராசையா - 3ஆம் வட்டாரம், முள்ளியவளை, முல்லைத்தீவு)

**ஜெயா** (சங்கரப்பிள்ளை கணேசன்-கட்டையர்குளம், வவுனியா)

**2 ஆம் லெப். சாலினி** (நவநீலவதனா அருமைச் சந்திரன் - புதியசந்தை, வல்வெட்டித்துறை)

அம்பாறை, சொறிக்கல்முனைப் பகுதியில், சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட கிறிஸ்தவ மதகுரு.

1991 ஆம் ஆண்டு முல்லைத்தீவு - பட்டிக்குடியிருப்புப் பகுதியில், சிறிலங்கா இராணுவத்தினருடனான மோதலில் வீரச்சாவெய்திய -

துணைப்படைவீரர் -

**சிவராசா** (சிவசம்பு சிவராசா - பட்டிக்குடியிருப்பு, முல்லைத்தீவு)

இவருடன் வந்து கொண்டிருந்த போது இதே சம்பவத்தில் சிறிலங்கா இராணுவத்தினரால் கொல்லப்பட்ட மாமடுவைச் சேர்ந்த தமிழ்ப் பொதுமகன்.

மட்டக்களப்பு - களுவாஞ்சிக்குடிப்பகுதியில், சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் வீரச்சாவெய்திய -

**கமல்** (முல்லைத்தீவு)

## 45 ம்நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

ஈழ மண்ணில் பிறப்பு 10 – 03 – 1971



ஈழ மண்ணில் உதிர்வு 30 – 05 – 1992

### லெப். புகழேந்தி (நித்தி)

(சிவசுப்பிரமணியம் சம்புநாதன்)

ஓ எங்கள் இளம் தளிரே!<br>
ஈழ மண்ணைக் காப்பதற்கு<br>
பறந்தோடிச் சென்றாய்<br>
சாதனைகள் பல ஈட்டி - பூமியிலே<br>
புகழ் வீரனாய் திகழ்ந்தாய்<br>
உந்தன் புகழ் வீரம் கேட்டு<br>
பூரித்து நின்றோம் ஈழமண்ணில்<br>
ஆண்டு இரண்டு ஆகும்முன்<br>
மாவீரன் ஆவாய் - என<br>
யார் நினைத்தோம் - இளம் தளிரே!<br>
புகழேந்தி என்று புகழ்பாடி<br>
ஈழமண்ணில் மாதம் இரண்டாகிறது<br>
ஆனால் உன் நினைவோ எங்கள் மனதை<br>
விட்டு என்றும் அகலாதையா

அன்னாரின் மறைவையொட்டி எமது இல்லத்திற்குவந்து அஞ்சலிசெலுத்திய போராளிகள், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது நன்றியைத்தெரிவித்து இன்று 13 - 07 - 92 நமது இல்லத்தில் நடைபெற இருக்கும்வீட்டுக் கிருத்திய வைபவத்திலும் கலந்துகொள்ளுமாறு மிகப்பணிவன்புடன் வேண்டுகின்றோம்.

உன் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

சில்லாலை மேற்கு,<br>
பண்டத்தரிப்பு,

உமது பிரிவால் துயருறும்<br>
குடும்பத்தினர்<br>
(2807)

**ரோம்** (சோமசுந்தரம் திருநீலசங்கர் - 155-ம்கட்டை, இரணைமடு, கிளிநொச்சி)

**மன்சூர்** (கதிரிப்பிள்ளை செல்வகுமார்-நாகர்கோயில் வடக்கு, பருத்தித்துறை, யாழ்.)

**சசி** (சுப்பிரமணியன் குமரன் - அல்வாய் கிழக்கு,யாழ்.)

**சிவநாதன்** (இ.செல்லத்துரை ஜெயராஜ்-பொற்பதி வீதி,கொக்குவில் கிழக்கு, யாழ்.)

**அன்பவன் அம்பழன்** (சுந்தரலிங்கன்ஜெயகாந்தன் தபாற்கந்தோர் வீதி, கிரான், மட்டக்களப்பு)

**இருதயராஜ்** (நிக்கலஸ் லோறன்ஸ் - 6-ம் கொலனி, சொறிக்கல் முனை, அம்பாறை)

**கிரோ** (திருநாவுக்கரசு குசலவன் - இராமநாதபுரம், கிளிநொச்சி)

**அர்ச்சுனா** (சுப்பிரமணியம் சுரேஸ்குமார் - மீசாலை வடக்கு, கொடிகாமம், யாழ்.)

**குலசிங்கம்** (இராசலிங்கம் பிறேமன்-2-ம்வட்டாரம், கண்டலடி, வாகரை, மட்டக்களப்பு)

**அங்கதன்** (கந்தன் நடராஜா ராஜ்குமார் - 4-ம்கட்டை, இணுவில் கிழக்கு, யாழ்.)

திரு.செ.கந்தசாமி போட்டியின் மத்தியில் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

புதிய உபதலைவராக சுண்டிக்குளி தோமஸ் அடிகளார் சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச்சங்கத்தைச் சேர்ந்த திரு. சி. இராசதுரை ஏகமனதாகத் தெரிவுசெய்யப் பட்டுள்ளார். அத்துடன் 7 பேர்கொண்ட நிர்வாகசபை உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர். [24]

## "மீண்டும் புதிதாய் பிறப்போம்" ஆய்வரங்கு

(யாழ்ப்பாணம்)

நமது விமசகர்களின் விமர்சன அணுகு முறைகள் மாற வேண்டிய தேவை அதிகமாகவுள்ளது என்று கலாநிதி சபா ஜெயராசா குறிப்பிட்டார். நேற்று முன்தினம் யாழ். பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் இணுவையூர் சிதம்பர திருச்செந்திநாதனின் 'மீண்டும் புதிதாய்ப் பிறப்போம்' என்னும் நாவல் பற்றி ஆய்வுரையை நிகழ்த்திய கலாநிதி சபா. யெஜராசா மேலும் கூறுகையில், உருவம் உள்ளடக்கம் எனப் பிரித்து உருவம் தான் முக்கியம் என்றும், உள்ளடக்கம் தான் முக்கியத் என்றும் மூர்க்கத்தனமாக வாதிட்ட பழையஅணுகு முறைகள் காலாவதியாகிவிட வேண்டும் எனக் குறிப்பிட்டார்.

மறுமலர்ச்சிக் கழகத் தலைவர் சிறீகாந்தா தலைமையில் நடைபெற்ற இந்த வைபவத்தில் விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் புதுவைஇரத்தினதுரையின் அறிமுகவுரையைத் தொடர்ந்து எழுத்தாளர் ஐ. சாந்தன், விரிவுரையாளர் வி. பி. சிவநாதன் ஆகியோர் ஆய்வுரை நிகழ்த்தினர். நூலாசிரியரின் பதிலுரையைத் தொடர்ந்து நிகழ்ச்சி நிறைவு பெற்றது.

பொறுத்திருந்து பார்த்தது போதும் தமிழா - இனி
போராட்டம் வேண்டும் என்று கூறுதமிழா
துரோகியின் உடம்பில் உயிர் எதற்கு
தினம் பந்தம் பிடித்து வாழ்பவருக்கு மானம் எதற்கு
முப்படைக்கும் பின்னே வந்தால் வீரன் தானோ. இது
எத்தனை நாள் நடக்கும் கேளு தமிழா
உரிமை உரிமை என்று குரல் கொடுப்போம்
அதை தரமறுத்தால் தமிழ்நாடு அமைப்போம்
சிங்கள நாட்டினிற்கு வணக்கம் செய்வோம் - நாம்
அடிமைஇல்லை என்று வாழ்ந்திடுவோம்

விகார வீதி, -திருமலைத் தொடர்பகம்
திருக்கோணமலை. ( சி/ 4688 )

# 1-ம் ஆண்டு நினைவலைகள்

வீர ஜனனம் 08 — 08 — 1970



வீரச் சாவு 13 — 07 — 1991

## மேஜர் சுரேஸ் ( க. புலேந்திரன் )

என் மனதை விட்டகலாக் கண்ணா!
சிறுவயதிலிருந்தே என்பிள்ளையாயிருந்து பள்ளிப் படிப்பிலும், விளையாட்டிலும் முதன்மைபெற்று வளர்ந்தவனே கண்ணா! என்னையோ உமது அன்புப் பெற்றோரையோ எண்ணாமல் மண்ணுக்கு தொண்டு செய்ய எண்ணி ஆனையிறவு மண்ணில் மாவீரனாய் மறைந்தவனே!

13-7-92 அன்று தாளையடி புனித அந்தோனியார் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுத்து உமக்கும் ஏனைய மாவீரர்களுக்கும் வேண்டிக்கொள்வோம்.

எமது வானகத் தந்தையிடம் விடுதலை, சுபீட்சம் கிடைக்க நீங்களும் வேண்டிக்கொள்வீர்களாக.

தாளையடி (2793) வளர்ப்புத்தாய் பெற்றோர், சகோதரர்

**கமல்** (முல்லைத்தீவு)

ஆனையிறவு சிறிலங்கா இராணுவமுகாம் தகர்ப்பு முயற்சியாக, மேற்கொள்ளப்பட்ட ஆகாய-கடல்-வெளி நடவடிக்கையில், உப்பள அலுவலக பிரதான முகாம் மீதான தாக்குதலின் போது வீரச்சாவெய்திய-

**வராகன்/வரதன்** (சின்னத்துரை சர்வகுமார் - கொற்றாவளை, அளவெட்டி வடக்கு, யாழ்)
**மேஜர் கேசரி** (பாலகிருஸ்ணன் அரசகேசரி-தம்பசிட்டி, புலோலி மேற்கு யாழ்)
**மேஜர் சுரேஸ்** (கணேஸ் குலேந்திரன் பிரான்ஸ்க்கா-562, கமால் ஒழுங்கை, யாழ்ப்பாணம்)
**கப்டன் டக்ளஸ்** (விக்னேஸ்வரராசா சதீஸ்வரன் ஆஸ்பத்திரி வீதி, மானிப்பாய் யாழ்)
**கப்டன் யஸ்ரின்** (கிருஸ்ணபிள்ளை சுதாகர்-கொற்றாவத்தை, அல்வாய் மேற்கு, யாழ்ப்பாணம்)
**கப்டன் நடா** (தங்கராசா பாஸ்க்கரன் - சித்தி விநாயகர் எதிர் வீதி, தம்பிலுவில், அம்பாறை)
**லெப். லோகி** (வேலாயுதம் சிவகுமார் - 1-ம் கட்டை, புலோலி தெற்கு, பருத்தித்துறை, யாழ்)
**லெப். டில்லிகாந்** (மயில்வாகனம் சந்திரகுமார் நெடியகாடு, வல்வெட்டித்துறை, யாழ்)
**லெப். பரன்** (தியாகராஜா மோகனராஜா -9, பெரியமடு, மன்னார்)
**லெப். கஜன்** (சின்னையா சீவரத்தினம், அளவெட்டி வடக்கு, யாழ்)
**லெப். காசி** (மரியான் ஞானம் - நெகிழங்குளம் மாங்குளம், முல்லைத்தீவு)
**லெப். பிரசாத்** (கந்தசாமி மனோகரன் முட்டுச்சேனை, வெருகல், மூதூர் திருகோணமலை)
**லெப்.பிரசாந்** (வீரபத்திரன் சுரேந்திரன் - 5 ஆம் வாய்க்கால், புன்குளம், திருக்கோணமலை)
**2-ம்லெப்.நார்த்தீபன்** (அழகராசா புஸ்பராசா - சுப்பர்மடம், பருத்தித்துறை, யாழ்.)
**2-ம்லெப்.அகிலன்** (கதிர்காமு பாலச்சந்திரன் - போக்கறுப்பு,முள்ளியான்,யாழ்.)
**2-ம்லெப்.மதிவாணன்** (ஐயாத்துரை சபேசன் - துன்னாலை தெற்கு, கரவெட்டி, யாழ்.)
**2-ம்லெப்.தனேந்திரன்** (துரைசிங்கம் சிறிகரன் - கல்லறைவத்தை, மாரீசன்கூடல், இளவாலை,யாழ்,)
**2-ம்லெப்.டொனால்ட்** (இராமசாமி புவனகுமார் - இரத்தினபுரம், கிளிநொச்சி)
**2-ம்லெப்.மஞ்சுதன்** (சிவமாலை குகநேசன் - புளியங்குளம், வவுனியா)
**ஜெகன்** (நடராசா தவராசா - பரந்தன்,கிளிநொச்சி)
**சீராளன்** (சண்முகம் உதயகுமார் - 95, கனகபுரம், கிளிநொச்சி)
**அங்கதன்** (கந்தன் நடராஜா ராஜ்குமார் - 4-ம்கட்டை, இணுவில் கிழக்கு, யாழ்.)
**மெரடோனா நிரோனா** (கைலாசபிள்ளை சந்திரகுமார்-ஆலங்கேணி, கிண்ணியா,திருக்கோணமலை)
**திலகன்** (அருணாசலம் சிவநாதன் - 14-ம்குடியிருப்பு, மண்டூர், மட்டக்களப்பு)
**மருது** (இராமசாமி மருதலிங்கம் - 18, முத்தையன் கட்டு, ஒட்டிக்கட்டான், முல்லைத்தீவு)
**யுகந்தன்** (நடராசா பத்மநாதன் - 16-ம் கட்டை, கொக்குத்தொடுவாய், மணலாறு)
**அப்பன்** (யோண் செபஸ்டர் - புதுக்குடியிருப்பு, தம்பலகமம், திருக்கோணமலை)
**பார்த்தீபன்** (டொமினிக் கனியூட் - 5-ம்வட்டாரம், பேசாலை, மன்னார்)
**நாகராசா** (முத்துராஜா நாகராஜா-புதியகுடியிருப்பு கண்டி வீதி, மாங்குளம், முல்லைத்தீவு)
**சுரேஷ்** (சுப்பிரமணியம் மணிவண்ணன்-10/3ஓட்டுமடம் வீதி, யாழ்ப்பாணம்)
**கப்டன்.தமயந்தி** (கமலலோஜினி வைத்தியநாதன்-ஆத்திமோட்டை, இலுப்பைக்கடவை, மன்னார்)
**லெப்.வினோஜா** (விஜிதா சுவாம்பிள்ளை - 21, 1-ம் குறுக்குத்தெரு, பாஷையூர், யாழ்.)
**2-ம் லெப்.கவி** (ராஜி சீவரத்தினம் - ஆதியாமலை, உடுப்பிட்டி, யாழ்.)
**2-ம்லெப்.பூபாலினி** (பரமேஸ்வரி நாகரத்தினம் - நியூ அம்பாள் பேக்கரி, 8-ம் படிவம், யோகபுரம், மல்லாவி, முல்லைத்தீவு)
**தவமலர்** (மஞ்சுளாதேவி ஈஸ்வரபாதம்-மருதங்கேணி வடக்கு, தாளையடி, யாழ்.)
**நேதாஜி** (விஜயகுமாரி சிவஞானம் - ஓடைவெளி, நெடுங்கேணி, மணலாறு)
**நிசா** (விஜயகுமாரி சின்னத்தம்பி - சிங்கைநகர், புலோலி தெற்கு, யாழ்.)
**அனோஜா/அனுசா** (சிறிகலா யோகநாதன் - இராசபுரம், கரடியனாறு, மட்டக்களப்பு)
**மாலா** (றோஸ் மங்கலிக்கா யாக்கோப் சில்வா - பூக்குளம், புத்தளம்)
**கண்மணி** (சரோஜினி முருகையா - சின்னக்கடை, மன்னார்)
**மீனாட்சி** (கலைச்செல்வி இராஜரட்ணம் - 1-ம்வட்டாரம்,முள்ளியவளை,முல்லைத்தீவு)
**அமுதப்பிரியா** (அகிலகுமாரி பரமலிங்கம் - 4-ம்வட்டாரம்,புங்குடுதீவு,யாழ்.)
**குயின்சி** (தயாநிதி தர்மராசா - அராலி தெற்கு, வட்டுக்கோட்டை, யாழ்.)

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

## தமிழீழ விடுதலைப் புலிகள்

(சி/4680)

## றோவின் கணக்குகளை மேற்பார்வை செய்ய குழு

### – பாரதிய ஜனதா கோரிக்கை

(டில்லி)

இந்திய உளவுச் சேவையான 'றோ' வின் கணக்கு விபரங்களை மேற்பார்வை செய்வதற்கென ஒரு பாராளுமன்றக் குழுவை நியமிக்க வேண்டுமென இந்தியாவின் முக்கிய எதிர்க்கட்சியான பாரதீய ஜனதாக்கட்சி கோரிக்கை விடுத்துள்ளது.

## இரசாயன தொ.சாலையில் பெரும் வெடி விபத்து

(அமஸ்ரடாம்)

அமஸ்ரடாம் அருகில்கடந்த வெள்ளிக்கிழமை இரசாயனத் தொழிற்சாலையில் அடுத்தடுத்து வெடிவிபத்துக்கள் ஏற்பட்டுப் பெரும் தீ மூண்டதாக ஹோலந்திலிருந்து வரும் செய்திகள் கூறுகின்றன.

இந்த விபத்தில் பலர் இறந்திருக்கலாம் என்று அஞ்சப்படுகிறது. எனினும் விபரங்கள் கிடைக்கவில்லை. ஆகாயத்தில் நூற்றுக்கணக்கான அடி உயரத்துக்குத் தீ கொழுந்து விட்டு எரிவதாகவும் பக்கத்திலுள்ள சர்வதேச விமான நிலையத்தின் ஓடு பாதையை அடர்த்தியான புகை மூட்டம் மறைந்து விட்டதாகவும் நேரில் கண்டவர்கள் கூறுகிறார்கள். தொழிற்சாலைக்கு அருகே குடியிருப்புப் பகுதிகளில் வாழும் மக்களைப் பாதுகாப்பான இடங்களுக்கு அனுப்பும் பணியில் பொலிஸ் ஈடுபட்டுள்ளது.

## 1 - ம் ஆண்டு நினைவஞ்சலி

வீரஜனனம்

19-05-1972

வீரமரணம்

13-07-1991



### வீரவேங்கை குயின்சி

(தயாநிதி தருமராசா)

அராலி தெற்கு


திதி : 02 - 07 - 1992

தமிழீழ மக்கள் தனித்துவமாய் நின்று
சுதந்திரக் காற்றதனைச்
சுவாசிக்க என்று
தூய சிந்தை கொண்டு
ஆனையிறவு அருஞ்சமரில் வெல்ல
ஆருயிரை யீந்தாய்
குயின்சி என்றே உன்னைக்
கூவி அழைத்திடுவோம்
எம் அன்பே தயாநிதி

அராலி தெற்கு,
வட்டுக்கோட்டை.

- குடும்பத்தினர்
(2803)

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



### 2ஆம் லெப். நார்த்தீபன்

(அழகராசா புஸ்பராசா)

ஜனனம்: 11.02.1976

வீரச்சாவு: 13.06.1991

(ஆனையிறவு நேரடி மோதலில் வீரமரணம்)

ஆனையிறவின் முகாம் தகர்த்து மண் மீட்க
தானையின் முன் நடந்த நார்த்தீபன்
எங்கள் கண்ணின் கருமணியே என்பதால்
நாங்கள் மகிமை பெற்றோம் - உன் திசையில்
தொடர்கிறோம்.

சுப்பர்மடம்,
பருத்தித்துறை.

குடும்பத்தினர்.
(2761)

## 1-ம் வருட நினைவஞ்சலியும் வீரவணக்கமும்



### மேஜர் சுரேஸ்

(கணேசன் புலேந்திரன்)

தமிழீழ மண்ணில்: 08-07-1970

தமிழீழ வரலாற்றில்: 13-07-1991

பெரிய உப்பள முகாமைத் தகர்த்திடும்
போரில் ...... கவச வாகனம் மீதினில்
இருளில் சென்ற விடுதலை வேங்கையே
ஈழமென்ற தாரக மந்திரம்
பெரியதாகித் திசையெல்லாம் கேட்டிட
பொங்கி நின்று போர்க்களம் ஆடியே
உயிரைத் தாயகம் மீட்டிடும் போரிலே
உதிர்த்த சுரேசெனும் வேங்கையை எண்ணுவோம்

13-07-1991 அன்று இவருடன் வீரமரணமடைந்த ஏனைய போராளிகளையும் இந்நாளில் நினைவு கூருகிறோம்

பெரியமடு, மன்னார்.

உமது பிரிவால் துயருறும்
அப்பா, அம்மா, தம்பி,
தங்கை, நண்பர்கள்.
(2805)

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



### வீரவேங்கை சசி

(சுப்பிரமணியம் குமரன்)

தாயின் மடியில் 16. 10. 1973

தாயகவிடிவில் 13 7. 1991

(13. 7. 91 ஆனையிறவுச் சமரில் வீரச்சாவு கண்டு மாவீரனானான்)

அடிமை நிலை போக்கிட அண்ணன் படையணி நோக்கினாய்
விடியல் காண்பதற்கு! கொடிய அரக்கன் குகை சென்றாயோ!
உலகம் உள்ள அளவும் உன் நாமம் மறையாது.

இவருடன் அன்றையதினம் வீரச்சாவுகண்ட மற்றைய வீரவேங்கைகளுக்கும் எமது அஞ்சலிகள்

அல்வாய் கிழக்கு

-குடும்பத்தினர்
(2799)

## நன்கொடைப்பணம் அதிகரிப்பு

(கொழும்புத்துறை)

யாழ். மாநகரசபைப்பகுதிச் சனசமூக நிலையங்களுக்கான 1992ம் ஆண்டுக்கான வருடாந்த நன்கொடைப்பணம் 1200 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

யாழ். மாநகரசபை ஆணையாளர் திரு. வே. பொ. பாலசிங்கம் இதனை அறிவித்துள்ளார் என யாழ். மாநகரசபை சனசமூக நிலையங்களின் சமாசத் தலைவர் திரு. டானியல் அன்ரனி தெரிவித்துள்ளார்.

இதுவரை காலமும் அரச நன்கொடைப்பணம் 600 ரூபாவாக வழங்கப்பட்டு வந்தது, குறிப்பிடத்தக்கது.(24)

## பரிசளிப்பு விழா

(வடமராட்சி)

பருத்தித்துறை இந்து மகளிர் கல்லூரியில் வருடாந்த பரிசளிப்பு வைபவம் ஒன்று அண்மையில் நடைபெற்றது யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் திரு. அ. துரைராசா முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டார்.

வடமராட்சிக் கல்விக் கோட்ட பிரதிப் பணிப்பாளர் திரு. எஸ். செல்லத்துரை சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார்.

துணைவேந்தர் இன்றைய காலகட்டத்தில் மாணவர்கள் கல்வியில் அதிக ஊக்கம் காட்ட வேண்டுமென்பதை எடுத்துக்கூறினார்.

திருமதி துரைராசா மாணவர்களுக்கு பரிசில்களை வழங்கினார். (82

## நித்திய பூசைகள் நடக்கிறது

தெல்லிப்பழை கோவிற்புலம் அண்ணமார், ஆலயத்தில் வழமைபோல் பூசைகள் நடைபெறுகின்றன. கடந்த மே, முப்பத்தோராம் திகதி யன்றுவிமானக்குண்டுவீச்சுக்கு இவ் ஆலயம் இலக்காகிய பின்னர், அண்மையில் விசேட அபிஷேகமும் பூசைகளும்நடத்தப்பட்டதைத் தொடர்ந்து தற்போது நித்திய பூசைகளும் நடைபெறுகின்றது குறிப்பிடத்தக்கது.

## வெற்றி வேண்டி பிரார்த்தனை

(உரும்பராய்)

உரும்பராய் சிதம்பர சுப்பிரமணிய கதிர்காம தீர்த்தோற்சவத்தை முன்னிட்டுப ருவதவர்த்தினி திருத்தொண்டர் சபையினர் தமிழ் மக்களுக்கு வெற்றி கிடைக்க அருள் தர வேண்டுமென எண்ணி ஞான வைரவர் ஆலயத்திலிருந்து எதிர்வரும் வியாழனன்று காலை இளைஞர்கள் காவடி எடுக்கவுள்ளனர்.

## கூட்டம்

யாழ். மாவட்டத்திலுள்ள கால்நடைத்தீவன உற்பத்தியாளர்களுக்கான கூட்டம் நாளை 14.07.92 அன்று காலை 9 மணிக்கு தாவடியிலுள்ள தமிழீழ ஆய்வு நிறுவன மையப்பணியகத்தில் நடை பெறவுள்ளது. சகல கால்நடைத் தீவன உற்பத்தியாளர்களும் தவறாது சமுகமளிக்கும் படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

✶ ✶

யாழ். பிரதேச சாரணாளர் சங்கபொதுக்கூட்டம் இன்று பிற்பகல் 3.00 மணியளவில் யாழ். இந்துக் கல்லூரியில் மாவட்ட ஆணையாளர் இ. மகேந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

யாழ். கல்விக்கோட்டம் நல்லூர் கல்விக்கோட்டம் தீவுப்பகுதியிலிருந்து இடம் பெயர்ந்து வந்து யாழ் குடாநாட்டில் இயங்கிக் கொண்டிருக்கும் பாடசாலைகளில் சாரணர் சேவையில் ஈடுபட்டிருக்கும், ஈடுபடாத பாடசாலை அதிபர்களை சாரணர் குழுவிற்கு பொறுப்பாக ஒவ்வொரு ஆசிரியர்கள் வழிகாட்டிகளை அனுப்பி வைக்குமாறு சாரணச் சங்கச் செயலாளர் பொ. சிறிஸ்கந்தராசாகேட்டுள்ளார்.

## வீடமைப்பு செயலகத்தில் சேவைக்கிளை

யாழ் மாவட்டத்தில் வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனத்தின் சேவைக் கிளை 1.07.1992 முதல் சுண்டிக்குளி, கண்டி வீதியில் அமைந்துள்ள யாழ் வீடமைப்பு செயலகக்கட்டிடத்தில் இயங்கி வருகிறது.

இதுவரை புனர்வாழ்வு புனர்நிர்மாண வேலைத் திட்டத்தின் கீழ் ரூபா 50,000 மும் அதற்கு மேற்பட்ட வீடமைப்புக் கடனும் கோரி யாழ் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை ஊடாக இந் நிதிக் கூட்டுத்தாபனத்திற்கு விண்ணப்பித்தவர்களின் விண்ணப்பங்கள் யாவும் மேற்படி சேவைக் கிளையினால் நடைமுறைப்படுத்தப்படும்.

எனவே விண்ணப்பதாரர்கள் தங்கள் விண்ணப்பங்கள் தொடர்பான விடயங்களுக்கு இச் சேவைக் கிளையின் பொறுப்பதிகாரியுடன் தொடர்பு கொள்ளுமாறு மேற்படி சேவைக்கிளையின் செய்தியில் தெரிவிக்கப்படுகிறது.

## ஓய்வூதிய வவுச்சர்கள் கிளிநொச்சியில்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட ஓய்வூதியக் காரர்களுக்கான ஜூலைமாதத்திற்கான பென்ஷன் வவுச்சர்கள் கிளிநொச்சிக்கு எடுத்து வரப்பட்டும் தற்பொழுது யாழ்ப்பாணம் கொண்டுவர முடியாமல் உள்ளது.

தற்பொழுது இடம்பெற்று வரும் இராணுவ நடவடிக்கை காரணமாக கிளிநொச்சி மாவட்டத்திற்கும் யாழ். மாவட்டத்திற்கு மிடையிலான பிரதான பாதைகள் மூடப்பட்டமையை அடுத்து மேற்படி பென்ஷன் வவுச்சர்களை எடுத்துவர முடியாது என யாழ். செயலக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. மேலும், பென்ஷன் வவுச்சர்களைத் திரும்ப கொழும்பிற்கு எடுத்து அங்கிருந்து கப்பல் மூலம் யாழ்ப்பாணம் எடுத்து வர நடவடிக்கை மேற்கொள்ளப் படுவதாகத் தெரியவருகின்றது. (பா)

## நிதி ஒதுக்கீடு

[கொழும்புத்துறை]

யாழ்.மாநகரசபை எல்லைக்குள் சுய வேலைவாய்ப்பை ஊக்குவிக்கும் முகமாக யாழ் மாநகரசபை2லட்சம் ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளது. சனசமூக நிலையங்களுக்கூடாகத் தொழிற்துறைத்திட்டங்களை மேற்கொண்டு சுய வேலை வாய்ப்புக்களை உருவாக்கிக் கொடுக்கத்திட்டமிடப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்படும் சனசமூக நிலையங்களுக்கு 5000 ரூபா வீதம் வழங்கப்படும் எனத்தெரிவிக்கப்பட்டுள்ளது. [24]


THILEEPAN RESEARCH FELLOWSHIP FOR BIOTECHNOLOGY 1992

*Those who applied for the above fellowship please be present for an interview with all documents on 17th July, 1992 at 10.00 a m; in the office of the Dean, Faculty of Medicine.*

Registrar
*University of Jaffna*
(4688)



## கம்பியூட்டர் கல்வி



★ BASIC
★ PASCAL
★ dBASE III+
★ LOTUS 1-2-3
★ WORD STAR 5.5

புதிய பிரிவுகள் ஆரம்பம் 16 - 07 - 1992
மேலதிக விபரங்களுக்கு:

**யுனிக்கோ கொம்பியூட்டர் சென்ரர்**

37, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.

கிளைகள்;

| | |
|---|---|
| வடமராட்சியில் | தென்மராட்சியில் |
| சதா பொண்ஸ் | சயன்ஸ் சென்ரர் |
| அல்வாய் கிழக்கு, | மடத்தடி, |
| அல்வாய். | சாவகச்சேரி. |

[சி/4684]


## நன்றி அறிவித்தல்

கடந்த 30-06-92இல்எமது அருந்தவச்செல்வன் ரமணானந்தசர்மா (2வது லெப். மணிமாறன்) எம்மைவிட்டுப் பிரிந்த துயரச் செய்தி கேட்டு உடன் எமக்கு ஆதரவாக இருந்தும் மேலும் பல வகைகளிலும் எமக்கு உதவிபுரிந்த அனைவருக்கும்எமது உளங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.


குறிப்பாக, எமது மைந்தனின் பாடசாலை நண்பர்கள் இவ்வேளையில் எமக்கு ஆற்றிய உதவிகள் எம்மால் ஈடு செய்ய முடியாதவை. மேலும் தமிழீழ விடுதலைப் புலிகள் எமக்கு பல வகைகளிலும் உதவி செய்துள்ளார்கள்.இவற்றை நாம் மறக்க முடியாது.

அத்துடன் கண்ணீர் அஞ்சலி செலுத்திய யாழ் இந்துக்கல்லூரியின் பல்வேறு மன்றங்கள், மாணவர்கள், மற்றும் பாடசாலை மாணவர்கள், தனியார் கல்வி நிறுவனங்கள், தொண்டர் நிறுவனங்கள், பொதுமக்கள், எமது அயலவர்கள் ஆகிய யாவர்க்கும் எமது நன்றி என்றென்றும் உரித்தாகுக.

வைத்தியநாதசர்மா– சொர்ணாம்பாள்
ஆசாரியார் ஒழுங்கை,
கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில்
13-07-92

(2801)

## 45ஆம் நாள் நினைவஞ்சலி



**லெப். ராஜன்**
(அன்னலிங்கம் மதியழகன்)

| | |
|---|---|
| மலர்வு: | உதிர்வு: |
| 20.07.1969 | 30.05.1992 |

(மணலாற்றில் வீரமரணம்)

''கோட்டையிலே கொடி நாட்டி
ஆனையிறவிலே சாதனை காட்டி
காரைநகரிலே களம் கண்டு
மணலாற்றிலே எதிரியை அழித்து
மார்பிலே குண்டு பட்ட - மாவீரனே
உன் புகழும் வையகத்தில்
உன் பணியும் தொடரும்''

மணலாற்றிலே வீரமரணமடைந்த சகல மாவீரர்களுக்கும் எங்கள் அஞ்சலிகள்.

13-07-1992 திங்கட்கிழமை இன்று வீட்டுக் கிரியையில் கலந்து கொள்ளும்படி போராளிகள், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் அழைக்கின்றோம்.

| | |
|---|---|
| உடுவில் தெற்கு, | தாய், சகோதரங்கள். |
| மானிப்பாய். | மைத்துனர்கள், மைத்துனிகள். |

(2778)

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



**2-ம் லெப். தனேந்திரன் (அக்பர்)**
(துரைசிங்கம் ஸ்ரீகரன்)

| | |
|---|---|
| தாயின் மடியில்: | தாயகமீட்பில் |
| 03·12·1975 | 13·07·1991 |

விடுதலைக்காய் வீறு கொண்ட வீரனே தனேந்திரா
எம் இனத்தின் விடுதலைக்காய் இச்சிறுவயதில் சீற்றம் கொண்டாய்
எதிரியினை விரட்டவென்று நீ ஆனையிறவு முகாம் சென்றாய்
கொடியவரை ஒழிக்கவென்று முன்நின்று போரிட்டாய்
எம் மண்ணின் விடிவிற்காய் உன்குருதி பாய்ந்ததடா
மாவீரர் வரிசையிலே நீயும் ஓர் வீரனடா
வெகு விரைவில் தமிழீழம் மலருமடா
அப்போது நீ கொண்ட இலட்சியம்
ஈழ மண்ணில் பூத்துச் சிரிக்குமடா.

ஆனையிறவு முகாம் தகர்ப்பு முயற்சியில் உந்தனுடன் வீரமரணமெய்தியஏனைய மாவீரர்களின் ஆத்ம சாந்திக்காகவும் பிரார்த்திக்கின்றோம்.

| | |
|---|---|
| தற்போதைய முகவரி | உந்தன் பிரிவால் துயருறும் |
| மடத்தடி லேன் | தாய், சகோதரர் |
| மானிப்பாய் | உறவினர்கள், நண்பர்கள். |

(2779)

## 45-ம் நாள் நினைவஞ்சலி அந்தியேட்டி கிரிகை

| காரைநகர் மண்ணில் வீரஜனனம் | | கட்டுவன் மண்ணில் வீரச்சாவு |
|---|---|---|
| 21 - 04 - 1975 |  | 30 - 05 - 1992 |

**வீரவேங்கை வேல்மாறன்**
(ஐயாத்துரை மனோகரன் (சுதா)

மலரும் தமிழீழ, மண்மீட்பு போர்தனில் - ஐ
மனோகரன் நானொருவன் என பங்கு கொண்டாய் - தினம்
பதறியே நெஞ்சம் கருகுதையா உன் சுற்றம் - கிளை
ஒடிந்ததே, உன்பிரிவால் எம் குடும்பம்.
வேல் கொண்டெதிர்த்திடும் வேலவன் போல் - வரி
வேங்கையின் குணம் கொண்டாய் - ''வேல்மாறா''
பால் தந்தணைத் திட்டாள், ஈழ அன்னை - எமக்கு
பகல், இரவு தூக்கமில்லை எம்மகனே ''சுதாகரனே''
பத்தியம் காத்தாள், பத்து மாதம் உன் அன்னை
சித்திரையில் வந்து தித்தாய் செல்வமுடன்
சத்தியமே உனது லட்சியமாம் - ஈழ
தாயகமே உனது தாரக மந்திரம்
நித்தியம் கூறிடும் பெரும் தலைவன் - வழி
நின்று விட்டாய், உன் கடைசி மூச்சுவரை.

இன்று எமது இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டி கிரிகையில் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், இயக்க நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

| | |
|---|---|
| அல்லின் வீதி, | நீங்கா நினைவுடன் |
| காரைநகர். | அப்பா, அம்மா, |
| தற்போதைய முகவரி: | சகோதரரும், குடும்பத்தினரும். |
| கீரிமலை வீதி, | |
| சித்தன்கேணி. | |

(2800)

சிந்தனைக்கு

சிறப்பு, வலிமையிலிருந்து வருவதல்ல;
வலிமையைச் சீராகப் பயன்படுத்துவதிலிருந்து
வருவது.
— ஹென்றிவார்ட் டீச்சர்


ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 13-07-1992
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2889 நிர்வாகபீடம் 2308
த. பெ. எண் - 05


# இராணுவத் தீர்விற்கு பலத்த அடி

‘‘புலிகள் சிதறி ஓடிக்கொண்டிருக்கின்றார்கள். இதனால், இராணுவத்தின் மீது எதிர்த்தாக்கு தலை நடத்த முடியாது உள்ளது” இவ்வாறு உயர் இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்ததாக, அரச கட்டுப்பாட்டிலுள்ள ஏரிக்கரைப் பத்திரிகை தலைப்புச் செய்தி வெளியிட்டுக் கொண்டிருக்கையில்‘

இயக்கச்சியில் நடந்த உக்கிர மோதலில், இருபதிற்கும் மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டதாகவும், 35 இராணுவத்தினருக்கு மேற்பட்ட இராணுவத்தினர் படுகாயம் அடைந்ததாகவும் சிறிலங்கா இராணுவத் தரப்பு தவிர்க்க முடியாமல் ஒப்புக்கொள்ள வேண்டியதாயிற்று.

அத்தோடு, திருமலையில் அதே தினத்தில், விடுதலைப் புலிகள் மேற்கொண்ட ஓர் துணிகர அதிரடித் தாக்குதலில், 18 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். பெருமளவு ஆயுதங்களும் புலிகளால் கைப்பற்றப்பட்டன. புலிகள் மேற்கொண்ட இத்தாக்குதல் குறித்து, உலக செய்தி ஸ்தாபனங்கள் விமரிசிக்கையில், கிழக்கில் புலிகள் வலுவிழக்கவில்லை என்றும், அரசாங்கம் கூறுவது போன்று கிழக்கு அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் முழுமையாக இல்லை என்றும் தெரிவித்தன.

இந்நிலையில், நேற்று முன்தினம் விடுதலைப் புலிகள் செட்டிகுளம் பகுதியிலுள்ள வண்ணாங்குளத்தில் இருந்த இராணுவ முகாமைத்தாக்கி நிர்மூலமாக்கியமையும், பெரும் எண்ணிக்கையான இராணுவத்தினர் கொல்லப்பட்டமையும், பெரும் தொகுதி ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டமையும், சிறிலங்கா இராணுவ, அரசியல் வட்டாரங்களில் பெரும் அதிர்ச்சியையும் குழப்பத்தையும் ஏற்படுத்தியுள்ளன.

வண்ணாங்குளத்தில் விடுதலைப்புலிகள் மேற்கொண்ட தாக்குதல் குறித்து இராணுவ, அரசியல் வட்டாரங்கள் இவ்வாறு அதிர்ச்சியும், குழப்பமும் அடைவதற்குக் காரணமும் இல்லாமல் இல்லை. விடுதலைப் புலிகளின், இறுதிக் காலம் நெருங்கிக்

# வீடியோ படங்கள் திரையிட புதிய விதி முறைகள் அறிவிப்பு

வீடியோத் திரைப்படங்கள் திரையிடுவதற்கான கட்டுப்பாடுகளையும், புதியவிதிமுறைகளையும் விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகத்தின் மையப்பணியகம் அறிவித்துள்ளது.

அதன்முழுவிபரங்களும் வருமாறு; பெரும்போரைச் சந்தித்து எம் தாயகம் துடித்துக் கொண்டிருக்கின்றது. விடுதலையை அவாவி நிற்கும் மக்களும் போராளிகளும் போர்க்களங்களிலும், தயாரிப்பு வேலைகளிலும் ஓய்வின்றிப் பணியாற்றிக்கொண்டிருக்கின்றனர். பெரும்பாலான மக்கள் இந்தப் போராட்டத்தை தங்கள் போராட்டமாகவே கருதி அவலங்களுக்கு மத்தியிலும் நிலையெடுத்து நிமிர்ந்துநிற்கின்றனர் ஆனால்குறைந்ததொகையினரானஒருகூட்டம் இந்த மண்ணை ஒரு கேளிக்கை நிலமாகக் கருதி எம் மக்களின் வாழ்நிலையையும், விடுதலை போரையும் எச்சப்படுத்த எத்தனிக்கின்றனர். வீடியோத் திரைப்படங்கள் மூலமும், கலை நிகழ்வுகள் என்ற போர்வையில் காலத்துக்கொவ்வாத கருத்துக்களையும் மக்கள் மனங்களில் விதைக்க முற்படுகின்றனர்.

மக்களின் தனிமனித உணர்வுகளையும், கருத்துக்களையும் பெரிதும் மதிக்கும் நாங்கள், எங்கள் உயிரினும் மேலான போராட்டத்திற்கு ஊறு விளைக்கும் எந்த நிகழ்வுகளையும் அனுமதிக்கப் போவதில்லை. சீரழிவுக் கருத்துக்களைச் சிந்தி மலிவான உணர்வுகளுக்குத் தீனி வழங்கும் தென்னிந்தியத் திரைப்படங்களையும், உலகெங்கும் தடை செய்யப்பட்டுள்ள ஆபாசப் படங்களையும் தமிழீழத்தில் திரையிடுவதனால் ஏற்படும் ஆபத்துக்களை அவதானித்துள்ளோம். எனவே சமீப காலமாகத் தளர்த்தியிருந்த கட்டுப்பாடுகளை மீண்டும் அமுல்படுத்த எண்ணியுள்ளோம். இதன்படி வீடுகளில் அவ் இல்லங்களுக்குரிய உறுப்பினர்கள் மட்டும் அமர்ந்து, முற்றாகத் தடை செய்யப்பட்ட திரைப்படங்கள் தவிர்ந்த ஏனைய திரைப்படங்களைப் பார்வையிடுவதற்கு எந்த விதமான கட்டுப்பாடுகளும் கிடையாது. ஆனால் உள் அரங்காகவும், சிறிய தியேட்டர்களாகவும் வீடுகளை உருவாக்கி பண வருவாயைக் கருத்திற் கொண்டு வீடியோப் படங்களை காண்பிப்பது இன்று முதல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது. குடும்ப உறுப்பினர்கள் மட்டுமே பார்வையிடுவதாகவும், குடும்ப மங்கள நிகழ்வு வீடியோப் படங்கள் மட்டுமே பார்வையிடுவதாகவும் கூறிக் கொண்டு ஓரிடத்தில் தினசரி பலர் கூடி பணவருவாயைக் கருத்தில் கொண்டு வீடியோப் படங்களைத் திரையிடுவது எமது கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. இப்படியான ஏமாற்றுத் திரையிடல்கள் இன்று முதல் முற்றாகவே தடை செய்யப்படுகின்றது.

கோவில் திருவிழாக்களை முன்னிட்டும், சனசமூக நிலையங்கள் மற்றும் சமூக பொது அமைப்புக்களின் விழாக்கள் என்று கூறிக் கொண்டும் திறந்த வெளிகளில் வீடியோத் திரைப்படங்கள் திரையிடுவதும் இன்று முதல் தடை செய்யப்படுகின்றது.

பக்திப்படங்கள்என்றும்புரட்சிப்படங்கள் என்றும் தங்களைத் தாங்களே ஏமாற்றிக் கொண்டு மக்களையும் ஏமாளிகளாக்கும் வீடியோபடங்களை தவிர்த்துக்கொள்ளுமாறு மக்களை அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

இன்னும் சிலர் ஆங்காங்கே அறைகளில் கூடி உலகெங்கும் தடைசெய்யப்பட்டுள்ள ஆபாசமான, பாலுறவு சம்பந்தமான ஆங்கிலத்திரைப்படங்களையும் மலிவான மனித உடலிச்சைகளைத் தூண்டும் படங்களையும் பார்வையிட்டு வருவது எமது கவனத்துக்கு கொண்டுவரப்பட்டுள்ளது. இன்று முதல் இவை தடை செய்யப்படுவதுடன் மீறுவோர் மீது கடும் நடவடிக்கை எடுப்பதுடன் ஒளிபரப்புச் சாதனங்களும் பறிமுதல் செய்யப்படும்.

ஒளிபரப்புச் சாதனங்களையும், மின்சார உபகரணங்களையும் வாடகைக்கு விடும் தனிநபர்களோ, நிறுவனங்களோ இவ்விதிமுறைகளை நன்குணர்ந்து தடைசெய்யப்பட்ட நிகழ்வுகளுக்கு தங்கள் சாதனங்களை வாடகைக்கு கொடுக்க வேண்டாமென அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம். மீறுவோரின் சாதனங்கள் பறிமுதல் செய்யப்படுவதுடன் எக்காரணம் கொண்டும் மீள ஒப்படைக்கப்படமாட்டாது என்பதையும் அறியத்தருகின்றோம்.

அன்பார்ந்த தமிழீழமக்களே!

எம் மண்ணின் நலன் கருதியும், எம் புனிதப்போரின் பெறுமானம் கருதியும் நல்ல தலைமுறையொன்றை உருவாக்கவேண்டும் என்ற விடுதலைப்புலிகளின் பேராவல் கருதியும் விதிக்கப்படும் சரியான இந்த விதிமுறைகளுக்கமைய நடந்து நாட்டுக்கும் உங்களுக்கும், எமக்கும் ஒத்துழைப்பு நல்கவேண்டுமென்று அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

காணாமல் போனோர் குடும்பங்களுக்கு

# நஷ்டஈடு வழங்காது அரசு தட்டிக் கழிப்பு

அரசாங்கம் சர்வதேச மன்னிப்புச் சபையிடம் காணாமல் போனவர்களின் குடும்பங்களுக்கு நஷ்டஈடு வழங்குவதாக ஒப்புக் கொண்டிருக்கிறது. இருந்தும் மூன்றுமாத காலமாகியும் இன்னும் நஷ்டஈடு வழங்கப்படாததுடன் இது தொடர்பாக அமைச்சரவையின் அனுமதியும் இன்னும் பெறப்படவில்லை.

இவ்வாறு இரத்தினபுரி மாவட்ட ஐ. சோ. முன்னணி எம்.பி. வாசுதேவ நாணயக்கார புதனன்று பாராளுமன்றத்தில் சமூக அபிவிருத்தி தேசிய நிறுவன சட்டமூல விவாதத்தில் கலந்துகொண்டு பேசும்போது தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பேசுகையில், காணாமல் போனவர்களின் குடும்பங்களுக்கு நஷ்டஈடு வழங்காத காரணத்தால் அக்குடும்பங்களிலுள்ள பாடசாலை செல்லும் மாணவிகள் பாடசாலைகளில் இருந்து விலகி வாழ வழிஇல்லாமல் விபசாரிகளாக மாறியுள்ளனர். இருந்தும் நஷ்டஈடு வழங்கப்படவில்லை.

மேலும் இப்போது உழைக்க முடியாதவர்களுக்கு வழங்கப்

# காமினி மகாவித்தியாலயம் புனரமைக்க நடவடிக்கை

(வவுனியா)

சுமார் 40 இலட்சம் ரூபா

வவுனியாவில் இடம் பெற்ற இடம்பெயர் சேவையின்

# நற்குணாதிசயங்கள் யாவும் வாய்ந்தவர் பற்றிக்ஸ் அதிபர்

### பிரிவுபசார விழாவில் கல்விப்பணிப்பாளர்

(கொழும்புத்துறை)

‘‘ஒரு கல்லூரி அதிபருக்கு ஆளுமை, அன்பு, அடக்கம், பண்பாடு, பொறுமை, முகாமைத்துவம் யாவும் ஒருங்கே அமைய வேண்டும். இந்தப் பண்புகள் சிறந்த நல்ல குணாதிசயங்கள் யாவும் யாழ். புனித பத்திரிசியார் கல்லூரி முன்னாள் அதிபர் வணக்கத்துக்குரிய பிரான்சிஸ் யோசப் அடிகளாராகும். இவரின் வழிநடத்தலால் 500 பாடசாலைகளுள் இக்கல்லூரி சகலவகையிலும் மிக உன்னத முதல் திறமையான கல்லூரியாக திகழ்கிறது.’’

இவ்வாறு யாழ். புனித பத்திரிசியார் கல்லூரியில் கடந்த 33 வருடங்கள் ஆசிரியராகவும் அதிபராகவும் பணிபுரிந்து கடந்த 30-6-92ல் ஓய்வு பெற்ற வணக்கத்துக்குரிய பிரான்சிஸ் யோசப் அடிகளார் பிரியாவிடை வைபவ விழாவில் யாழ். மாவட்ட பிரதிக்கல்விப்பணிப்பாளர் திரு. இரா. சுந்தரலிங்கம் பிரதம விருந்தினராகப் பங்குபற்றி உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

புனித பத்திரியார் கல்லூரி முன்னாள் அதிபர் திரு. பிரான்சிஸ் யோசப் அடிகளார் உரையாற்றுகையில் ‘‘உயிர்த்த கிறிஸ்து பரலோகம் சென்றார். அவர் பூவுலகத்திலும், பரலோகத்திலும் 33 வருடம் சீவித்தார் அதே போல் கடந்த 33 வருடங்கள் நான் இக்கல்லூரி வளர்ச்சிக்காக அயராது உழைத்து வந்தேன்

இங்குவீற்றிருக்கும் சகலரது வருகையும், உங்கள் யாவரின் புகழ் மாலைகள் என்னை என் உள்ளத்தில் உவகை ஊட்டிக் இக்கல்லூரி வளர்ச்சிக்கு உறுதுணையாக நின்று என்றென்றும் வழிநடத்தும் என்பது உண்மை. எனது பதவியை ஒரு புனிதமான பணி என நினைத்து இந்த தமிழீழத்திற்கும், தமிழ் மண்ணிற்கும், கல்லூரிக்கும் முழுமையாகப் பாடுபட்டு அயராது உழைத்து.வருவேன் நான் டற்றிசனாகத் தொடர்ந்து இருந்து பணியாற்றுவேன் இது உறுதி‘நான்’குறையவேண்டும் மற்றவர்கள் வளரவேண்டும் சமுதாயம் வளரவேண்டும் என்ற நல்நோக்குடன் செயல்பட்டு வந்தேன் எனது புனிதமான சேவையைகௌரவித்து தங்கப்பதக்கம், மாலைகள் அன்பளிப்புகள் வாரிவழங்கினீர்கள், கௌரவித்தீர்கள் என்பது எனது சமய சமூகப் பணிக்கே என்பதைக் சகலருக்கும் நன்றி கூறி இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.’’

யாழ். மறைமாவட்ட ஆயர் அதி வணக்கத்திற்குரிய டாக்டர். பி. தியோகுப்பிள்ளை, மாணவர் தலைவன் டயர், பி. ரி. ஆர். மோகன் திருமதி மோசஸ், ஆர். மகேந்திரன் உட்பட வேறுபலரும் பேசினர்
(24)

# சனசமூகங்களுக்கிடையில் இலக்கியப் போட்டி

யாழ். மாநகரசபை சனசமூக நிலையங்களின் சமாசம் இப்பகுதி எல்லைக்குட்பட்ட சனசமூக நிலையங்களுக்கு இடையில் கலை, இலக்கியப் போட்டிகளை நடாத்தவுள்ளது.

சிறுகதை, ஓவியம், கவிதை கட்டுரை, பொது அறிவுப் போட்டி ஆகியன முக்கிய போட்டிகளாக இடம்பெறும் இப்போட்டிகளுக்கான விண்ணப்பங்கள் யாவும் எதிர் வரும் 28-ம் திகதி (28-7-92) செவ்வாய்க்கிழமைக்கு முன்னர் சனசமூக நிலையங்களுக்கு ஊடாக நிலையங்களின் தலைவர், செயலாளர் ஒப்பத்துடன் அனுப்பி வைக்குமாறு கலை கலாசாரக் குழுத்தலைவர் திரு சி. அமிர்தலிங்கம் தெரிவித்துள்ளார்.

இப்போட்டிகள் பற்றிய மேலதிக விபரங்களுக்கு யாழ். நாவலர் வீதியில் உள்ள நாவலர் கலாசார மண்டபத்தில் அமைந்திருக்கும் சமாச அலுவலகத்தில் நேரில் சென்று பெற்றுக் கொள்ளும்படி தெரிவிக்கப்பட்டுள்ளது. (24)

இருதரபபு கருத்து வேறுபாடு

# தென் ஆசியஒத்துழைப்பிற்கு தடையாகக் கூடாது

– பிரேமதாசா

(கொழும்பு)

இருதரப்பு கருத்து வேறுபாடுகளும், தப்பபிப்பிராயங்களும் தென்ஆசிய ஒத்துழைப்பிற்கு தடையாக அமைய இடமளிக்கக் கூடாது என்று சிறி

பின் ஒத்துழைப்பு இருதரப்பு உறவுகள் விசுவாசமாகஅமைய வழிகோலும் என்றும் அவர் தெரிவித்தார்.

படுத்தியுள்ளன.

வண்ணாங்குளத்தில் விடுதலைப்புலிகள் மேற்கொண்ட தாக்குதல் குறித்து இராணுவ, அரசியல் வட்டாரங்கள் இவ்வாறு அதிர்ச்சியும், குழப்பமும் அடைவதற்குக் காரணமும் இல்லாமல் இல்லை. விடுதலைப் புலிகளின், இறுதிக் காலம் நெருங்கிக் கொண்டு இருக்கின்றது. யாழ்ப்பாண குடா நாட்டைப் பாதுகாக்க முடியாமல் புலிகள் திணறிக் கொண்டிருக்கின்றார்கள். இதற்கென தமது முழுப் பலத்தையும் குடாநாட்டிற்குள் புலிகள் ஒன்று சேரத் திரட்டிக்கொண்டிருக்கின்றார்கள் என சிறிலங்கா இராணுவத்தரப்பு எதிர்பார்த்தும், பிரசாரப்படுத்தியும் கொண்டிருக்கையில், புலிகளின் அதிரடித்தாக்குதலினால், முகாம் ஒன்றே அழிந்து போவதென்பது அதிர்ச்சியை ஏற்படுத்தக் கூடிய தொன்றுதான்.

ஆனால், இது விடுதலைப் புலிகளுக்கோ அன்றி தமிழ் மக்களுக்கோ ஆச்சரியம் அளிக்கக் கூடிய தொன்றல்ல. ஏனெனில் சிறிலங்கா அரசாங்கம் மேற்கொள்ளும் போலியான பிரசாரங்களையும், பொய்களையும் தமிழ் மக்கள் நன்கு புரிந்துள்ளார்கள். புலிகளின் போராடும் திறனும் மனவுறுதி பற்றியும் அவர்களுக்குத் தெரியும். விடுதலைப்புலிகளுடன் சுமார் இரண்டரை வருடங்களாகப் போரிட்ட இந்திய இராணுவத் தளபதிகளே புலிகளின் போர்த்திறன் பற்றியும், மனவுறுதி பற்றியும் பாராட்டியும் புகழ்ந்தும் உள்ளனர்.

மேலும், இனப் பிரச்சினைக்கு ஒருபோதும் இராணுவத்தீர்வு சாத்தியப்படப் போவதில்லை என விடுதலைப்புலிகளும் தமிழ் மக்களும் வற்புறுத்தியும் வந்துள்ளனர். அத்தோடு தேசிய இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு சாத்தியப்படப் போவதில்லை என்று, உலக நாடுகள் பல சிறிலங்காவை வற்புறுத்தியுமுள்ளன. மேலும் உலக நாடுகளில் நடந்த நடக்கின்ற தேசிய இனப்போராட்டங்கள் இதை வெளிக்காட்டியும் உள்ளன.

இந்நிலையில், கடந்தகால நேரடி அனுபவத்திற்கும், உலகவரலாற்றுப்படிப்பினைக்கும் மாறாக இனப்பிரச்சினைக்கு இராணுவத்தீர்வை வெற்றிகரமாக நடத்திமுடித்துவிடலாம் என திட்டமிட்ட சிறிலங்கா இராணுவ, அரசியற் தரப்பிற்கு இது ஒரு பெரும் அடியாகும். யாழ்ப்பாணக் குடாநாட்டின் மீதான பெரும்படைஎடுப்பு புலிகளை அழித்துவிடக்கூடியதோ, அன்றி இனப்பிரச்சினைக்கு தீர்வுகண்டு விடக்கூடியதோ அல்ல என்பதை இத்தாக்குதலில் இருந்தே சிறிலங்கா இராணுவத்தரப்பு தெளிவாக உணர்ந்திருக்க வேண்டும். இதையும் அவர்கள் உணரத்தவறின் அனுபவப்பட்டுத்தான் திருந்தவேண்டும்.

## காமினி மகாவித்தியாலயம் புனரமைக்க நடவடிக்கை

(வவுனியா)

சுமார் 40 இலட்சம் ரூபா பணத்தில் வவுனியாவில் சிங்களப் பாடசாலையை புனர்நிர்மாணிக்கும் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

வவுனியா-மன்னார் வீதியில் அமைந்துள்ள காமினி மகாவித்தியாலயமே புனர் நிர்மாணிக்கப்பட்டு வருகிறது.

வவுனியாவில் இடம் பெற்ற இடம்பெயர் சேவையின் போது சிங்கள அதிகாரிகளின் வேண்டுகோளையடுத்து கல்வி அமைச்சு இவ்வேலைத் திட்டத்தை ஆரம்பித்துள்ளது.

இந்தப் பாடசாலை தமிழ்க் குடிமக்கள் நெருக்கமாக வாழ்ந்து வரும் பகுதியில் அமைக்கப்பட்டிருப்பது தெரிந்ததே.

ந்து விலகி வாழ வழிஇல்லாமல் விபசாரிகளாக மாறியுள்ளனர். இருந்தும் நஷ்டஈடு வழங்கப்படவில்லை.

மேலும் இப்போது உழைக்க முடியாதவர்களுக்கு வழங்கப்படும் தர்ம சம்பளம் வாழ்க்கையை கொண்டு நடாத்த போதாமலுள்ளது. இதை வாங்குபவர்களுக்கு மட்டுமல்லாது அதனை வழங்குபவர்களுக்கும் இதனால் வெட்கத்துக்கு உள்ளாகின்றனர் எனத் தெரிவித்தார்.

(கொழும்பு)

இருதரப்பு கருத்து வேறுபாடுகளும், தப்பபிப்பிராயங்களும் தென்ஆசிய ஒத்துழைப்பிற்கு தடையாக அமைய இடமளிக்கக் கூடாது என்று சிறிலங்கா ஜனாதிபதி ஆர்.பிரேமதாசா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் 'சார்க்' அமைச்சர்கள்கூட்டத்தை ஆரம்பித்து உரையாற்றிய போதே பிரேமதாசா இதனைத் தெரிவித்தார்.

உண்மையில் சார்க் அமைப்

– பிரேமதாசா

பின் ஒத்துழைப்பு இருதரப்பு உறவுகள் விசுவாசமாகஅமைய வழிகோலும் என்றும் அவர் தெரிவித்தார்.

### கடிகாரப்

கடிகாரம் ஒன்று கொக்குவிலில் ரி. பாஸ்கரன் என்பவரால் கண்டெடுக்கப்பட்டு ஈழநாதம் காரியாலத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

உரிமையாளர் அடையாளம் காட்டிப்பெற்றுக்கொள்ளவும்

அயோத்திய சம்பவ விபரங்களுடன்

## புதுடில்லி வருமாறு மத்திய அரசு அழைப்பு

(டில்லி)

அயோத்தியாவின் தற்போதைய நடப்புகள் குறித்து எல்லாத் தகவல்களோடும் புதுடில்லிக்கு வருமாறு உத்தரப் பிரதேச முதல்அமைச்சர் கல்யாண்சிங்கிடம் மத்திய அரசு கேட்டுக்கொண்டுள்ளது. கடந்த வெள்ளி ராஜ்யசபாவில் பேசிய மத்திய உள்துறை இணை அமைச்சர் எம். எம். ஜேக்கப் மேலும் கூறுகையில் முதலமைச்சரிடம் நேரில் கலந்து பேசிய பின்னர் மத்திய அரசு அறிக்கை ஒன்றை வெளியிடும் எனவும் தெரிவித்தார்.

இதனிடையேசர்ச்சைக்குஉட்பட்ட இடத்தைப் பேணிபாதுகாப்பதற்காகபலநடவடிக்கைகளை உத்தரப் பிரதேச அரசு எடுத்துக்கொண்டிருப்பதாக முதலமைச்சர் கல்யாண்சிங் மத்திய உள்துறை அமைச்சருக்கு எழுதியுள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளார். அத்துடன் அமைதியும், வகுப்பு நல்லிணக்கச் சூழலும் முழு அளவில் நிலவுவதாகவும், இதனைக் குலைக்கும் எல்லா நடவடிக்கைகளும் உறுதியோடு சமாளிக்கப்படும் என்றும் அவர் கூறியுள்ளார்.

மேலும் அயோத்தியாவில் சர்ச்சைக்கு உட்பட்ட இடத்தில் நிலத்தைத் தோண்டி சமப்படுத்தும் வேலையை நிறுத்துமாறு உத்தரப் பிரதேச அரசை வற்புறுத்த வேண்டுமென காங்கிரஸ் தவிர்ந்த ஏனைய கட்சிகள் மத்திய அரசை வற்புறுத்தியுள்ளன.

அத்துடன் நிலத்தைத் தோண்டுதல், சமப்படுத்துதல், அடிக்கல் நாட்டுதல் என்பன போன்ற நடவடிக்கைகள் அனைத்தும் நீதிமன்ற உத்தரவுகளை மீறும் செயலாகும் என்றும் லக்னோவில் நடைபெற்ற கூட்டமொன்றில் எதிர்க்கட்சித் தலைவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

# அயோத்தி கட்டுமாண பணியை நிறுத்த உயர் நீதிமன்றம் ஆணை

(டில்லி)

அயோத்தியில் பிரச்சினைக்கு உட்பட்ட ராமஜென்பூமி-பாபர் மசூதி வளாகத்தில், உத்தரப்பிரதேச அரசினால் கையகப்படுத்தப்பட்ட நிலத்தில் நிரந்தர அடிப்படையில் கட்டுமாணப் பணி எதனையும் மேற்கொள்ள வேண்டாம் என்று உயர் நீதிமன்றம் உத்தரப் பிரதேச அரசைக் கேட்டுள்ளது.

நீதிமன்ற ஆணையை மீறி கட்டுமாணப் பணியை தொடக்காமல் மாநில அரசைக் கட்டுப்படுத்துமாறுதாக்கல் செய்த மனுவை விசாரணை செய்த உயர் நீதிமன்றம் இந்த ஆணையை பிறப்பித்துள்ளது

அயோத்தியில் கட்டுமாணப் பணிகள் நடைபெறுவதை அடுத்து உள்துறை அமைச்சர் எஸ். பி.சவான் நிலைமையை கண்டறிய அமைச்சர் அயோத்திசெல்வார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இந். புலனாய்வு அதிகாரிகள் கொழும்பில் விசாரணை

(சென்னை)

பத்மநாபா கொலைவழக்கு, பட்டனம்காத்தான் பகுதியில் நடைபெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் என்பன தொடர்பாக விசாரணை நடத்திவரும் இந்தியப் புலனாய்வுக்குழுவினர் கொழும்பு வந்து சிறையில் இருக்கும் சில கைதிகளை விசாரணை செய்திருப்பதாகத் தெரியவருகின்றது.

சென்னை திரும்பியிருக்கும் இப்புலனாய்வுக் குழுவினர் கொழும்பு அதிகாரிகள் தமக்குப் பூரண ஒத்துழைப்பு நல்கியதாகவும் கூறியுள்ளனர்.

## இவ்வருடத்தின்சிறந்ததமிழர் தொண்டமானாம்

(சென்னை)

இவ் வருடத்தின் சிறந்த தமிழர் விருது அமைச்சர் தொண்டமானுக்கு வழங்குவதற்கு தமிழகப் புத்திஜீவிகள் அமைப்பு முடிவு செய்துள்ளது. கடந்த ஐம்பதாண்டுகளாக இலங்கைத் தோட்டத் தொழிலாளர்களுக்கு ஆற்றிய சேவைக்காக இந்த விருது அவருக்கு வழங்கப்படவுள்ளது. பாராட்டுப் பத்திரம், தங்கப் பதக்கம், இந்திய நாணயம் பத்தாயிரம் ரூபாவுக்கான காசோலை என்பன உள்ளிட்ட இந்த விருது வழங்கும் வைபவம் எதிர்வரும் பதினைந்தாம் திகதியன்று சென்னை அடையாறுப் பகுதியிலுள்ள ஹோட்டல் ஒன்றில் நீதிபதி வேணு கோபாலன் தலைமையில் நடைபெறவுள்ளது.

## ஒன்பது தமிழக மீனவர்களை காணவில்லை என அறிவிப்பு

(சென்னை)

ராமேஸ்வரத்திலிருந்து கடந்த சில தினங்களுக்கு முன்னர் கடலில் மீன் பிடிக்கச் சென்ற ஒன்பது தமிழக மீனவர்களை காணவில்லை என்று ராமேஸ்வர மீனவர் கழகம் அறிவித்துள்ளது.

## சேர்பியா மீது படை பலம்; அமெரிக்கா ஆலோசனை

(வாஷிங்டன்)

சேர்பியா மீது பலதரப்பு படைபலத்தைப் பிரயோகிப்பதற்கு ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையில் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றப்பட வேண்டியிருக்கும் என அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஜேம்ஸ் பேக்கர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை சேர்பியப் படைகள் பயன்படுத்தும் கேந்திர ஆயுதங்களை நிர்மூலமாக்குவதற்கு விமானத்தாக்குதல் நடத்துவதுபற்றி பரிசீலனை செய்யப்போவதாக அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ்புஷ் பொஸ்னிய ஜனாதிபதியிடம் உறுதி அளித்துள்ளார். இத்தகவலையும் ஜேம்ஸ் பேக்கர் செய்தியாளரிடம் தெரிவித்துள்ளார்.

### நம்பிக்கையில்லா பிரேரணை மீது விவாதம்

லோக்சபாவில் நரசிம்மராவ் அரசுக்கெதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானம் விவாதத்திற்கு அனுமதிக்கப்பட்டது.

நம்பிக்கையில்லாத் தீர்மானம் மீதான விவாதம் வரும் 15, 16 ஆம் திகதிகளில் நடைபெறும் என்று லோக்சபாவில் சபாநாயகர் அறிவித்துள்ளார்.

ஈழநாதம்

# இந்திய ஜனாதிபதி தேர்தல் இன்று வாக்குப் பதிவு

(டில்லி)

இந்தியாவின் ஒன்பதாவது ஜனாதிபதியை தெரிவு செய்வதற்கானவாக்கெடுப்புஇன்று நடைபெறுகிறது. இன்று காலை 10.00 மணிக்கு இந்திய பாராளுமன்ற மண்டபத்திலும் மாநில தலைநகரங்களிலும் வாக்குப் பதிவு ஒரே சமயத்தில் தொடங்கும்.

உபஜனாதிபதியும் இந்திரா காங்கிரஸ் வேட்பாளருமாகிய சங்கர் தயாள் சர்மாவிற்கும் தேசிய முன்னணி, பாரதீய ஜனதா ஆகியகட்சிகளின் ஆதரவுடன் போட்டியிடும் பி.ஜே. சுவெல்லுக்கும் இடையே தான் முக்கிய போட்டி இடம் பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

பாராளுமன்றத்தின் இரு சபைகள், மாநில சட்டமன்ற உறுப்பினர்கள் ஆகியோர் வாக்களிக்கும் உரிமை உடையவர்கள் 4700 க்கும் அதிகமான இவ் உறுப்பினர்கள் இன்றைய தேர்தலில் வாக்களிக்க உள்ளனர்.

1971 ஆம் ஆண்டு சனத்தொகை அடிப்படையில் ஒவ்வொரு உறுப்பினரதும் வாக்கெண்மதிப்பு நிர்ணயிக்கப்படுகிறது. பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரின் வாக்கெண் மதிப்பு 702 ஆகும். மாநில சபை உறுப்பினர்களின் வாக்கெண் மதிப்பு மாநிலத்திற்கு மாநிலம் சனத்தொகையை அடிப்படையாகக் கொண்டு மாறுபடுகிறது. குறைந்தபட்சமாக சிக்கிம் மாநில உறுப்பினரின் வாக்கு மதிப்பு 07 ஆகவும் அதிக பட்சமாக உத்தரப் பிரதேச மாநில உறுப்பினரின் வாக்கெண் மதிப்பு 208 ஆகவும் உள்ளது.

பாராளுன்ற உறுப்பினர்களின் மொத்த வாக்கெண் மதிப்பு 5 இலட்சத்து 44 ஆயிரத்து 752 ஆகும். மாநில சட்டப்பேரவை உறுப்பினர்களின் மொத்த வாக்கெண் மதிப்பு 5 இலட்சத்து 44 ஆயிரத்து 971 ஆகும்.

வியாழன் காலை 10.00 மணிக்குவாக்குகளைஎண்ணும் வேலைகள் ஆரம்பமாகும்என தெரிவிக்கப்படுகிறது.

### புலிகள்

க்குமிடையே போக்கு வரத்துச் செய்ய முடியாது என்று இராணுவம் கூறியது. ஆனால் யாழ்ப்பாணத் தீபகற்பத்தை ஏனைய பகுதிகளிலிருந்துதுண்டிக்கும் வேலை இன்னும் நிறைவேறவில்லைப் போல் தோன்றுகிறது.

ஒருதனித் தாக்குதலில் 47 இராணுவத்தினர் கொல்லப்பட்டதே யாழ்ப்பாணக் குடாநாட்டுக்குள் ஆயிரக்கணக்கான இராணுவ வீரர்களைக் குவிக்கும் இராணுவத்தின் உத்தி பற்றிக் கேள்விக் குறியையும் எழுப்பியுள்ளது.

இப்படி வடபகுதியில் இராணுவத்தைக் குவித்திருப்பதின் விளைவாக வடக்கின் ஏனைய பகுதிகளிலும் கிழக்கு மாகாணத்திலும் தாக்குதல்கள் நடக்கக்கூடிய நிலைமை உருவாகியிருக்கிறது. அதே சமயம் புலிப்படையினர் நேரடிமோதலைத் தவிர்த்து வருகின்றனர் என்றவாதத்திற்கு இந்த வார இறுதியில் நடைபெற்ற மோதல்கள் சான்றாக உள்ளன. புலிப்படையினர் இராணுவத்தினரைத் தாக்கும் காலம், இடம் ஆகியவற்றைத் தேர்ந்தெடுத்து திட்டமிட்டு தாக்குதலில் கவனம்செலுத்தி வருகின்றனர்.

### 12 இராணுவத்தினர்

காணாமல் போனது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

கைது செய்யப்பட்ட இராணுவத்திடமிருந்து இரண்டு லட்சத்து 32 ஆயிரத்து 975 ரூபா ரொக்கப் பணமும் மீட்கப் பட்டுள்ளதாகவும், நகைகளும் அவர்களிடம் இருந்து மீட்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### ஹெரோ யின்

போதைவஸ்து ஒழிப்புப் பிரிவினர் கைப்பற்றினர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக இரு ஆண்கள் இரு பெண்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் கூறப்படுகிறது.

### வீரச்சாவு

கொண்ட எறிகணை வீச்சில் காயமடைந்திருந்தவிடுதலைப் புலிகள் போராளி ஒருவர் வீரச்சாவு அடைந்தார்.

வீரச்சாவு அடைந்த வீர வேங்கை கானகன் (டக்கி சுப்பிரமணியம்சிவகுமார் இல. 28, சிவபுரம் வவுனிக்குளம்) என்னும் போராளிக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீர வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

### மன்னார்

தியிலிருந்தும், வவுனியாவின் வடக்குப் பகுதியிலிருந்தும் நேற்று பகல் முழுவதும் தமிழர் குடியிருப்புகள் மீது பெருந்தொகையான எறிகணைகள் தொடர்ச்சியாகஏவப்பட்டன.

### முஸ்லிம்

காலத்தையும் பாதுகாப்பையும் பற்றி அதிக கவனம் செலுத்திக் கொண்டிருக்கிறார்கள் என்று சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் எம். எச். எம் அஷ்ரப் தெரிவித்துள்ளார்.

# எதிரிப்படை முகாமை தகர்த்தெறிந்த வேங்கைகள்

## பாடசாலை அதிபர்களுக்கு பணிப்பாளர் அறிவுறுத்தல்

பாடசாலை அதிபர்கள் இருநூறு ரூபாவுக்கு மேல் கையிருப்பில் வைத்திருக்கக்கூடாது. கூடிய தொகையாயின் பாடசாலை அபிவிருத்திச் சபை அல்லது பழைய மாணவர் சங்கத்தைக் கூட்டி அதற்கான பிரேரணையின் பிரதியுடன் திணைக்கள அனுமதிக்கு அனுப்புதல் வேண்டும். மேலும் இடம் பெயர்ந்த மாணவர்களிடமிருந்து பலவந்தமாக எந்த வித வசூலிப்புகளும் செய்யலாகாது என்று வட பிரதேச கல்விப்பணிப்பாளர் ஆர். சுந்தரலிங்கம் தெரிவித்தார்.


நூற்றிரண்டு பாடசாலைகளின் அதிபர்களும், கொத்தணி அதிபர்களும் கலந்து கொண்ட பண்டத்தரிப்புக் கல்விக்கோட்டப் பிரதிப் பணிப்பாளர் ப. சண்முகராசா அவர்களின் பிரிவுபசார வைபவத்தில் பேசிய போதே கல்விப் பணிப்பாளர் இவ்வாறு கூறினார்

சரியான வரவு நேரம் வெளியேறும் நேரம் ஆகியவற்றைப் பதிதல் அவசியம். அதிபர்கள் ஒழுங்காகப் பாடசாலை வரவு இடாப்புகளைப் பேணுதல் வேண்டும். ஒரு பாடசாலையில் கையொப்பமிட்டு மறு பாடசாலைகளில் படிப்பிப்பதைத் தவிர்க்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

### பொலித்தீனில்

வாறு அவற்றை அழித்துவிட வேண்டும் என தெரிவிக்கப்படுகிறது.

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



**மேஜர் ஜாசீர்**

(கந்தசாமி சிவதாஸ்)

தாயின் மடியில்: 03.07.1970
தமிழீழ மண்ணில்: 15.07.1991

தமிழினம் இன்னல் கண்டு, தாங்கிட முடியாததாகி
விடுதலை வேங்கையாக, கட்டைக் காட்டினிலே
வேங்கை நீ மடிந்ததில்லை - உன்
வீரமும் குறைந்ததில்லை
ஓங்கிய போர்முனையில் - நீ
ஒதுங்கியும் நின்றதில்லை
பகைவரை வீழ்த்தும் வேளை
தாங்கினாய் நெஞ்சிற் குண்டை
தமிழ் அன்னை சிலிர்த்தே போனாள்.


உசன் தெற்கு,
மிருசுவில்.

- குடும்பத்தினர்

(2804)

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி

வீர ஜனனம்
21
—
02



வீர மரணம்
15
—
07

## கொக்குவில் இந்துக் கல்லூரி

வருடாந்த இல்ல

**விளையாட்டுப் போட்டி 1992**

காலம்: 15.07.92 புதன்கிழமை
நேரம்: பி. ப. 2-00 மணி

பிரதம விருந்தினர்: வைத்திய கலாநிதி
பொ. சொர்ணலிங்கம்
*L.R.C.P (Lond), M.R.C.S (ENG), M.R.C.P*
திருமதி ஜெயராணி சொர்ணலிங்கம்

பழைய மாணவர்கள், பெற்றோர்கள், நலன் விரும்பிகள் அனைவரையும் அன்புடன்அழைக்கின்றோம்.


நன்றி

இங்ஙனம்
அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்

(சி 4689)

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி

தாயின் மடியில்
12
01
1973



ஆனையிறவு மண்ணில்
13
07
1991

**கப்டன் டக்ளஸ்**

(செல்வன் சதீஸ்கரன்)

ஆஸ்பத்திரிவீதி, மானிப்பாய்.

எம் செல்வமே எங்களை விட்டுப்பிரிந்து ஓராண்டு
காலமாகி விட்டதடா
இன்றும் உன் வெற்றித்திருமுகம் எங்கள்முன்
நிழலாடுதடா சதீஸ்
நீ வருவாய் வருவாய் என எதிர்பார்த்தே
ஏமாந்தோம் தெய்வமே
இனி எப்பிறப்பில் உம்மை காண்போமோ
செல்வமகனே

உமது பிரிவால் வாடும்:
அம்மா, (சித்தப்பா) யோகராசா, அக்காமார் பிறேமலதா, யசோதலதா, அண்ணா சுதாஸ்கரன், (அண்ணி) தயாளினி, தங்கை கேமலதா, தம்பிமார் ராஜ்கரன், ரமேஸ்கரன், பிரபாகரன்.

நல்லதம்பி ஹோட்டல்
ஆஸ்பத்திரி வீதி,
மானிப்பாய்.

[2809]

## இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்

யாழ்ப்பாணக்கிளை
வலிகாமம் வடக்குப் பிரிவு

**அனர்த்தங்களுக்கு முகம்கொடுத்தல் சம்பந்தமான கூட்டம்**



கபடன தெய்வம்
(நடராஜா ராஜி-இராமனூர், புளியங்குளம், வவுனியா)



கப்டன் மணிமாறன் (செல்வன்)
(நடராசா சிவாகரன் - தண்ணீரூற்று, முள்ளியவளை, முல்லைத்தீவு)



2 ஆம் லெப்டினன்ட் இளங்கோ
(இராமசாமி ரஞ்சித்நிரஞ்சன் ராஜன்- மன்னார்)

11-07-1991 அதிகாலை 3.10 மணியளவில் செட்டிகுளம் பகுதியிலுள்ள வண்ணான்குளம் சிறிலங்கா இராணுவ முகாம் முற்றாக தகர்த்தெறியப்பட்டது. இவ்வெற்றிகர தாக்குதலில் ஆறு வேங்கைகள் வீரச்சாவு அடைந்தனர்.



2 ஆம் லெப்டினன்ட் ஜெயரூபன் (நாயகன்)
(சின்னத்தம்பி வசந்தகுமார்- இல. 795, கட்சன் றோட், வட்டக்கச்சி, கிளிநொச்சி)




2 ஆம் லெப்டினன்ட் சுவேந்திரன் [பாபு]
(கிருஷ்ணமூர்த்தி கலாகரன்- புளியங்கூடல், ஊர்காவற்துறை)



வீரவேங்கை பகீரதன்
(ஆறுமுகம் நடராஜா- இல.02 தொப்பிக்கடையடி, இராமநாதபுரம், கல்மடு, கிளிநொச்சி)

---

02 — 07



1971 — 1991

## வீரவேங்கை லெஸ்ரன்
(அருளம்பலம் தவக்குமார்)

திதி: 13-07-1992

தவமே தவமே என்று தரணியெல்லாம் பெற்றோர் போற்றிட
தாய் மண்ணை காக்க வென்று தக்க தருணத்தில் புலியுடன் இணைந்தாய்
அன்னிய படையின் அக்கிரமத்தை அடக்கச்சென்றாய்
அரச படையை எதிர்த்து வீர காவியம் படைத்தாய்
மானிப்பாய் தந்த மறப்புலியே தாய்மண்ணையே எமது உயிர்என நினைத்தாய்
மாற்றான் கையில் மணலாறு மண்டியிடாது வீரத்துடன் மண்ணோடு மண்ணானாய்
தவிக்கும் பெற்றோர் மனம் இன்புறுகுதடா, உன் இலட்சியம் தமிழீழம் தம்பியர் மீட்பர் என்று.

ஐயா, அம்மா, சகோதரன், சகோதரி, உறவினர், நண்பர்கள்.

(2808)

---

## உள்வந்த வெளிச் சென்ற வாகன இலக்கங்கள்

12. 07. 1992

எமது பதிவிலுள்ள கடைசி இலக்கம்:- 4861

வடபகுதிக்கு வெளியே அனுமதித்தவாகனஇலக்கங்கள்:-
24-8700, 41-4893, 41-9211, 27-6762, 26-1204, 26-2414, 42-1182, 27-4289, 41-9038, 42-7975, 26-1321, 25-7762, 70-9587, 70-9115, 27-2034, 42-2323, 24-3906, 26-2840, 26-9992, 22-8855, 28-8229, 28-9037, 42-1750, 24-0098, 28-1085, 25-3994, 30-5646.

வட பகுதிக்கு உள்ளே அனுமதித்த வாகன இலக்கங்கள்:-
27-9707, 24-9938, 24-6340, 26-5173, 41-9327, 24-5454. 28-1724, 42-3965, 25-3240, 25-6473, 36-6029, 36-2482, 25-4287, 37-3969, 36-5988, 25-3757, 28-7312, 27-1629, 42-3239, 24-5939, 70-9642.

---

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1992 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 13 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

---

## சம்பந்தமான கூட்டம்

மேற்படி 14. 7. 92 [செவ்வாய்க்கிழமை], அருனோதயக் கல்லூரி, அளவெட்டியில் நடைபெறும் கூட்டத்திற்கு இப் பிரிவிலுள்ள தொண்டர்களையும், அங்கத்தவர்களையும், அரச அரசசார்பற்ற நிறுவனங்களின் உத்தியோகத்தர்களையும், சமூக சங்கங்களின் அங்கத்தவர்களையும் அழைக்கின்றோம்.

நிர்வாகம்

(சி 4690)

---

## 45-ம் நாள் நினைவலைகள்

வீர ஜெனனம் — வீரச் சாவு

26 — 08 — 1967



30 — 05 — 1992

## கப்டன் அன்பு (குட்டி)
(ஐயம்பிள்ளை சிவகுமார்)

ஓ...... அன்பே
மணலாறு வளர்த்தெடுத்த மாவீரனே
தம்பியின் பாதையிலே தளிர்விட்டு வளர்ந்தவனே
அன்பு மாஸ்டராகி வேங்கைகளை வளர்த்தவனே
அளம்பில் சமரினிலே காவியம் ஆனாயே.

30- 05- 1992 அன்று முல்லைத்தீவு அளம்பில் பகுதியில் நடைபெற்ற நேரடி மோதலில் வீரமரணமடைந்த கப்டன் அன்பு (குட்டி)வின் 45ஆம் நாள் நினைவான இன்று 13- 07- 1992 எமது இல்லத்தில் நடைபெறவிருக்கும் மதிய போசனத்தில் கலந்து கொள்ளுமாறு சகல போராளிகள், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

கந்தரோடை வீதி,
மாகியப்பிட்டி, சண்டிலிப்பாய்.

- குடும்பத்தினர்

(2767)